★
REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 செப்டெம்பர் 26 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 88 இல. 229 | September 26,Saturday, 2020 | 16பக்கங்கள் | 30/-

## பட்டங்களை மட்டுமே வழங்கும் நிறுவனங்களாக பல்கலைக்கழகங்கள் இருக்கக் கூடாது;

# நடைமுறை தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி புதிய பாடவிதானங்கள் அவசியம்

### கல்வி மறுசீரமைப்பின் அவசியத்தை தெளிவுபடுத்திய ஜனாதிபதி



எதிர்கால உலகிற்கு ஏற்ற பொருளாதார மற்றும் அபிவிருத்திக்கு பங்களிக்கக் கூடிய பிரஜையை உருவாக்குகின்ற கல்வி மறுசீரமைப்பின் அவசியத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெளிவுபடுத்தியுள்ளார்.

பல்கலைக்கழகங்கள், பட்டங்களை வழங்கக்கூடிய நிறுவனங்களாக மட்டுமல்லாமல் நாட்டுக்கும் பொருளாதாரத்திற்கும் அதேபோல் பட்டம் பெறுவோரும் அதன் மூலம் பயனை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டுமென ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

நடைமுறை தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி, புதிய பாடவிதானங்களை உடனடியாக அறிமுகப்படுத்துமாறு 06

## 'பாடும் நிலா' எஸ்.பி.பி காலமானார்

### இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறும்



பாடும் நிலா' எஸ்.பி. பாலசுப்ரமணியம் காலமானார்.

இவர் 06 தேசிய விருதுகளும், 25 நந்தி விருதுகளும் 45 ஆயிரம் பாடல்களையும் பாடி சாதனை படைத்துள்ளார்.

பிரபல பின்னணி பாடகர் எஸ்.பி.பால சுப்பிரமணியம் (வயது 74), கொரோனா தொற்று காரணமாக தீவிர சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றியே காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று நடைபெறுமென மகன் எஸ்.பி.பி.சரண் தெரிவித்துள்ளார். எஸ்.பி.பாலசுப்ரமணியம் காலமானதாக அவரது மகன் எஸ்.பி.பி சரண், நேற்று பிற்பகல் 01 மணியளவில் அறிவித்தார்.

பின்னணி பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம், கொரோனா தொற்று காரணமாக 06

## திலீபனின் நினைவேந்தல்; பொலிசாரின் கோரிக்கையையடுத்து

# சந்நிதியில் நடத்தவிருந்த உண்ணாவிரத போராட்டத்திற்கு நீதிமன்றம் தடை



### கொரோனா மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கட்டளை

நாகர் கோவில் விசேட நிருபர்

திலீபனின் நினைவேந்தலை முன்னிட்டு இன்று தொண்டமானாறு செல்வச் சந்நிதியில் முன்னெடுக்கத் திட்டமிட்ட அடையாள உணாவிரதப் போராட்டத்துக்கு தடை உத்தரவு விதித்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கொரோனா சுகாதார கட்டுப்பாடுகள் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இந்த தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.




இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் இந்த அடையாள உண்ணாவிரத போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் வல்வெட்டித்துறை பொலிசாரால் இந்த தடை உத்தரவு விண்ணப்பம் நேற்று முற்பகல் தாக்கல் செய்யப்பட்டது.

தியாக தீபம் நினைவேந்தலை நடத்த யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவு நேற்றுமுன்தினம் நீடிக்கப்பட்ட நிலையில் ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் நேற்றுமுன்தினம் கூடி இன்று தொண்டமனாறு செல்வச் சந்நிதியில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்த தீர்மானித்தனர். அதற்குத் தடை கோரி வல்வெட்டித்துறை பொலிசாரால் விண்ணப்பிக்கப்பட்ட வழக்கிலேயே பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றால் இந்த தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

## இருதரப்பு உறவுகளை மறு ஆய்வு செய்ய இந்திய பிரதமர் எதிர்பார்ப்பு

### பிரதமர் மஹிந்தவின் டுவிட்டர் பதிவுக்கு மோடி பதில் பதிவு

இலங்கை இந்தியாவுக்கிடையிலான இருதரப்பு உறவுகளை மறு ஆய்வு செய்ய எதிர்பார்ப்பதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். பிரதமர் நரேந்திர மோடி, தனது டுவிட்டர் பக்கத்தில் (24) 06







லேக்ஹவுஸ் நிறுவனத்தின் 'தினமின' நாளிதழுடன் இலவச இணைப்பான 'சுற்றுலா' சிறப்பிதழின் வெளியீடும் இணையத்தள பதிப்பின் வெளியீடும் நேற்று இராஜாங்க அமைச்சர் டி.வீ சானக்க தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் நிறுவனத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி டபிள்யூ. தயாரத்ன, ஆசிரியர்பீட பணிப்பாளர் தர்மஶ்ரீ காரியவசம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (படம்: ரஞ்சித் அசங்க)

## கிளிநொச்சியில் முதிரை மரங்கள் கடத்தியவர் கைது

### பூநகரி பொலிஸ் அதிரடி

கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட காட்டு பகுதிகளில் சட்டவிரோதமாக முத்திரை மரக்குற்றிகளை வெட்டி சூட்சுமமான முறையில் கடத்த முற்பட்டவேளை பூநகரி புலனாய்வு பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மரக்கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது. சுத்திகரித்த நீர் போத்தல்களை விநியோகிக்கும் வாகனத்திலேயே மரக்கடத்தலை இவர்கள் செய்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவமானது 04

# 20 க்கு எதிரான மனுக்களை விசாரிக்க 5 பேர் கொண்ட குழு

### செப்டெம்பர் 29 இல் பரிசீலிக்கப்படுமென அறிவிப்பு

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி பல மனுக்கள் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, இதுவரை 12 மனுக்கள் 20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை பரிசீலிக்க 05 நீதியரசர்கள் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நியமிக்கப்பட்டுள்ள 05 நீதியரசர்கள் விபரம்,

தலைமை நீதிபதி ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிஹாரே, 06

## சமுர்த்தி கொடுப்பனவிற்கு அதிக வட்டி வீதம் அறவீடு; முல்லைத்தீவிலிருந்து ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் சுட்டிக்காட்டு 03

## சிறுத்தை புலியின் இறைச்சி விற்பனை

### கண்டியில் மூவர் கைது

கண்டி, உடுதும்பர பிரதேசத்தில் சிறுத்தை புலியொன்றை கொன்று இறைச்சிற்காக விற்பனை செய்துக் கொண்டிருந்த தம்பதியினர் உள்ளிட்ட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உடுதும்பர பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உடுதும்பர கலல்கமுவ பிரதேசத்தில் பன்றி வேட்டைக்காக போடப்பட்டிருந்த 04

## விவசாய, கல்வித்துறைகளுக்கு அளப்பரிய சேவை செய்த இரத்நாயக்க



### அனுதாப பிரேரணையில் அமைச்சர் தினேஷ்

லோரன்ஸ் செல்வநாயகம்

மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.எம். கே. பி. இரத்நாயக்க விவசாயத் துறைக்கும் கல்வித் துறைக்கும் அளப்பரிய சேவை செய்தவர் என சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன 06

## இலங்கையில் இதுவரை 2,75,000 PCR சோதனைகள்

### 172 பேர் மட்டுமே தற்போது சிகிச்சை பிரிவில்

இலங்கையில் இதுவரை நடத்தப்பட்ட பி.சி.ஆர்.சோதனைகளின் எண்ணிக்கை 275,590யை கடந்துள்ளதாக கொரோனா வைரஸ் தொற்றைத் 06



பொதுமக்கள் முறைப்பாட்டு

## ஆணைக்குழுவின் தலைவராக அமைச்சர் காமினி லொக்குகே

லோரன்ஸ் செல்வநாயகம்



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் பொது மக்கள் முறைப்பாட்டு தெரிவுக் குழுவின் தலைவராக அமைச்சர் காமினி லொக்குகே நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் 06

## மிலிந்த மொரகொட உட்பட எட்டு புதிய இராஜதந்திரிகளை நியமிக்க அனுமதி

வெளிநாட்டு தூதரகங்களுக்கு புதிய இராஜதந்திரிகளாக பரிந்துரைக்கப்பட்டிருந்த 08 பேரை இப் பதவிகளுக்கு நியமிக்க பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் தொடர்பிலான தெரிவுக்குழு நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி சீ.ஏ. சந்திரபிரேம ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர பிரதிநிதியாகவும், எஸ். அமரசேகர தென் ஆபிரிக்காவிற்கான 06

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு;

## இணையத்தள ஊடகவியலாளருக்கு செப்டெம்பர் 30 வரை விளக்கமறியல்

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இணையத்தள ஊடகவியலாளரை கொழும்பு பிரதம நீதிவான் மொஹமட் மிஹால் எதிர்வரும் 30 வரை விளக்கமறியலில் வைக்க நேற்று உத்தரவிட்டார். 06

## சம்பந்தனுக்கு சுகவீனம் ஓய்வெடுக்க அறிவுரை

### வீட்டிலேயே தங்கியிருப்பதாக தகவல்



தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பெரும் உடல்நலப் பாதிப்பிற்குள்ளாகியுள்ளார் எனவும் இதனால் உடல் நிலை மிகப் பலவீனமாகியுள்ள தாக 06



செய்தியை முந்தித் தாரதில போட்டித்–
தன்மை இருக்கத்தான் வேணும்....
அதுக்காக இப்படியா?
உண்மைதான்... செய்திகள எழுதுற–
வைக்கு உயிர்களின்ர பெறுமதி தெரியாது
போல.. அவைக்கு அவசரம்..கையில போன்
ஒன்றை வைச்சுக்கொண்டு படுத்திற பாடு
தாங்க முடியல சாமி ..!

# மட்டக்களப்பு புனித வின்சன்ட் மகளிர் உயர் பாடசாலையின் 200 ஆண்டு நிறைவு விழா

இலங்கையின் புகழ்பூத்த மற்றும் மிகவும் பழமையான பெண்கள் பாடசாலையாக கருதப்படும் மட்டக்களப்பு புனித வின்சன்ட் மகளிர் உயர் தேசிய பாடசாலையில் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபவனியொன்று நேற்று காலை நடைபெற்றது.

மட்டக்களப்பு, கல்லடி பாலத்திலிருந்து மட்டக்களப்பு புனித வின்சன்ட் மகளிர் உயர் தேசிய பாடசாலையின் இலட்சினை பொறிக்கப்பட்ட வாகனத்துடன் நடைபவனி ஆரம்பமானது. 06






## நல்லாட்சியின் செயற்பாடுகளுக்கு நான் முழுமையான பொறுப்பல்ல

### முகநூலில் குற்றஞ் சாட்டுவோருக்கு மனோ MP பதில்



நல்லாட்சி கால "மத்திய வங்கி பிணைமுறி" ஊழல் தொடர்பாக என்னிடம் கேள்வி எழுப்பி பிரயோசனம் இல்லை. அவை பற்றி ரணில் விக்கிரமசிங்க, ரவி கருணாநாயக்க உள்ளிட்ட அர்ஜுன் மகேந்திரன், அலோசியஸ் கும்பலிடம்தான் கேட்க வேண்டுமென தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர், முன்னாள் அமைச்சர் 06

## பல்கலைக்கழக பாடவிதானம்

# தொழிற்சந்தையை நோக்கமாக கொள்ள வேண்டும்



தொழிநுட்ப விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழிநுட்ப பாடங்களுக்கு கூடிய அவதானம் எதிர்கால உலகிற்கு ஏற்ற பொருளாதார மற்றும் அபிவிருத்திக்கு பங்களிக்கக்கூடிய பிரஜையை உருவாக்குகின்ற கல்வி மறுசீரமைப்பின் அவசியத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெளிவுபடுத்தினார்.

பல்கலைக்கழகங்கள், பட்டங்களை வழங்கக்கூடிய நிறுவனங்களாக மட்டும் இல்லாமல் நாட்டுக்கும் பொருளாதாரத்திற்கும் அதேபோல் பட்டம் பெறுவோரும் அதன்மூலம் பயனை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டுமென ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். நடைமுறை தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி, புதிய பாடவிதானங்களை உடனடியாக அறிமுகப்படுத்துமாறு அவர் கல்வி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.



கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைக்கல்வி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக (24) பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.



பல வருடங்களாக நாட்டுக்குப் பொருத்தமான கல்வி மறுசீரமைப் பொன்று இடம்பெறாமை தற்போதைய தொழில் சந்தையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு காரணமாக உள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல்வேறு துறைகளில் தொழில் வாய்ப்புகள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன. ஆனாலும் அதற்கு அவசியமான மனித வளத்தை கல்வி முறைமை மூலம் உருவாக்கவில்லை.

“நாட்டின் எதிர்கால சமூகம் பயனுள்ள பிரஜைகளாக உருவாகுவதற்கு அவர்கள் புதிய அறிவு திறமைகள் மற்றும் திறன்களை விருத்தி செய்வது அவசியமாகும். இளைஞர், யுவதிகள் கல்வித்துறையில் கைவிடப்படாமல் இருப்பதற்கு முன்பள்ளி கல்வி முதல் உயர் கல்வியை நிறைவு செய்யும் வரை தெளிவான வழிகாட்டல்களை திட்டமிட வேண்டும். அதன் மூலம் தொழிநுட்ப கல்வி வாய்ப்புகளை அதிகரிக்கவும் கல்வி பொறிமுறையில் தொழிநுட்ப பாவனையை விரிவுப்படுத்தவும் முடியும். கல்விசார் அனைத்து நிறுவனங்களையும் ஒரே அமைச்சின் கீழ் கொண்டு வந்ததன் காரணம் இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கேயாகுமென ஜனாதிபதி தெரிவித்தார்.



சாதி, மத பேதங்களின்றி அனைத்து மாணவர்களுக்கும் சமமான கல்வி வாய்ப்பை வழங்குவது கட்டாயமாகும் என்றும் நாட்டுக்குப் பொருத்தமான பயனுள்ள பிரஜையை உருவாக்குவது அரசாங்கத்தின் கடமையாகுமென்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

கல்வியை தொடர முடியாத பிள்ளைகளுக்கு வயதெல்லைகள் இன்றி மீண்டும் எதிர்பார்க்கும் கல்வி இலக்கை அடைந்து கொள்வதற்கு புதிய மறுசீரமைப்பின் மூலம் அதற்கான பின்புலம் தயாரிக்கப்பட வேண்டும். பரீட்சையை மையப்படுத்திய கல்விக்கு மாற்றமாக மாணவர் மையக் கல்வி முறையொன்றை நடைமுறை ரீதியாக செயற்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். பல்கலைக்கழக பிரவேசத்திற்கு தகுதிபெறும் அனைத்து மாணவர்களும் பட்டம் பெறும் வரை செல்வதற்கு அவசியமான நடவடிக்கையுடன் பட்டதாரிகள் தொழில் கேட்டு வீதிக்கு இறங்காத, தொழிற்சந்தை பட்டதாரிகளை தேடிச் செல்லக்கூடிய கல்வி முறைமையொன்றின் உடனடி அவசியம் பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

எதிர்வரும் வருடத்தில் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கும் எண்ணிக்கை 31,000த்திலிருந்து 41,000 வரை அதிகரிக்கப்படும். திறந்த பல்கலைக்கழகத்திற்கு மேலதிகமாக 10,000 பேர் உள்வாங்கப்படுவர். தகவல் தொழிநுட்ப பட்டத்தை பயிலுவதற்காக 10.000 பேரை இணைத்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை தெரிவுசெய்யும்போது அபிவிருத்தி அடைந்த நாடுகள் பின்பற்றும் பல்கலைக்கழகங்களுக்கே உரிய முறைமையை தயாரித்தல் தொடர்பாகவும் கலந்துரையாடலில் அவதானம் செலுத்தப்பட்டது. ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள தேசிய கல்விக் கொள்கையை உடனடியாக கருத்தாடலுக்கு உட்படுத்தி செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பெசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர ஆகியோருடன் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள், துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# ஊடகத்துறையில் 55 வருடமாக தொடரும் வெற்றிப் பயணம்

## அகவை எண்பத்தைந்தில் காலடி பதிக்கும் மூத்த பத்திரிகையாளர் ஷண்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 1955 இலிருந்து கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டுள்ள ‘ஷண்’ என்று எல்லோராலும் அழைக்கப்படுகின்ற மூத்த பத்திரிகையாளர் ஷண்முகராஜா இன்று அகவை எண்பத்தைந்தில் அடியெடுத்து வைக்கிறார்.

1940 களில் தனது ஆரம்பக் கல்வியை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் (அன்றைய கால கட்டத்தில் சிறுவர்களும் அனுமதிக்கப்பட்டார்கள்) அதற்கடுத்து யாழ். மத்திய கல்லூரியிலும் பயின்ற ஷண், 1964 ஆம் ஆண்டு பத்திரிகைப் பயணத்தை ஆரம்பித்தார். முன்னாள் தினகரன் ஆசிரியர் வி. கே. பி. நாதனை ஆசிரியராகக் கொண்டு எம். டி. குணசேனாவின் இன்டிபென்டன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிலிருந்து வெளிவந்த ‘ராஜா’ சஞ்சிகை மூலம் பத்திரிகைத் துறைப் பயணத்தை அவர் ஆரம்பித்தார்.

1996 ஆம் ஆண்டு அதே பத்திரிகை ஸ்தாபனத்திலிருந்து அமரர் எஸ். டி. சிவநாயகத்தைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த தினபதி, சிந்தாமணி, சூடாமணியிலும் பணியாற்றியவர் அவர். கடைசியாக வீரகேசரியிலும் பணியாற்றி ஓய்வு பெற்றார். இன்றும் கூட இவரது ஆக்கங்கள், சுதந்திர ஊடகவியலாளராகப் பணியாற்றுவதன் மூலமாக ஷண், சஞ்ஜயன், அன்டர்ஷண் என்ற புனைபெயர்களில் வெளிவந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அகவையில் எண்பத்தைந்தைக் கண்டவர், பத்திரிகைச் சேவையில் ஐம்பத்தைந்தை தாண்டியுள்ளார். இன்றும் தொடர்கிறது இவரது ஊடகப் பயணம்.

2008 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14 ஆம் திகதி, வாழ்நாள் நீண்ட காலப் பத்திரிகைத்துறைச் சேவைக்காக இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கமும், இலங்கைப் பத்திரிகை மன்றமும் இணைந்து மவுண்ட்லெவனியா ஹோட்டலில் நடத்திய ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் 10 ஆவது வருடாந்த விருது வழங்கும் விழாவில் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஷண், 2015 ஆம் ஆண்டுக்கான 31 ஆவது கலாபூஷணம் அரச விருது வழங்கும் விழாவிலும் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

– சுரேஷ்

2020 செப்டெம்பர் 26 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன் விளம்பரம் 0112429367 விற்பனை பிரிவு 0112429444, 0112429378 ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

**தொழுகை நேரம்**

23ம் திகதி முதல் 26ம் திகதி வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.44 |
| லுஹர் | 12.04 |
| அஸர் | 03.16 |
| மஃரிப் | 06.07 |
| இஷா | 07.19 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் புரட்டாசி 10

ராகுகாலம் : காலை : 9.00 - 10.30வரை

சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை

யோகம்: சித்த யோகம்

நட்சத்திரம் : உத்திராடம் இரவு 11.38

திதி: தசமி

வறிய மக்களுக்கு அரசினால் வழங்கப்படும்

# சமுர்த்தி கொடுப்பனவிற்கு அதிக வட்டி வீதம் அறவீடு

## முல்லைத்தீவிலிருந்து ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் சுட்டிக்காட்டு

**ஓமந்தை விஷேட நிருபர்**

விவசாயிகள் மற்றும் வசதியற்ற வறிய மக்களுக்கு அரசாங்கத்தினால் சமுர்த்தி வங்கிகளின் ஊடாக வழங்கப்படும் சமுர்த்தி கொடுப்பனவிற்கு அதிக வட்டி வீதங்கள் அறிவிடப்பட்டு வருவதாக முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேசசபை உறுப்பினர் உலகநாதன் பார்த்தீபன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் அவர்களது வாழ்வாதாரம் மற்றும் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு (24) அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வறிய வசதியற்ற மக்களுக்கு வழங்கப்படுகின்ற சமுர்த்தி திட்டத்தை விரிவுப்படுத்தி பாரிய வரப்பிரசாதங்களை வழங்கியுள்ளமைக்காக தாங்கள் பாராட்டுக்குரியவராக இருக்கின்றீர்கள்.

நான் தங்களிடம் தயவாக கேட்டுக்கொள்வது, தற்போது சமுர்த்தி வங்கிகளில் ஏழைக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் சமுர்த்தி கடன்களுக்காக வழங்கப்படுகின்ற வட்டி வீதமானது ஏனைய தனியார் வங்கிகள், அரச வங்கிகள் என்பவற்றில் அறவிடுகின்ற வட்டி வீதங்களை விடவும் 06



இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் தந்தையின் இறுதிச்சடங்கில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று(25) கலந்து கொண்டார்.அன்னாரின் பூதவுடலுக்கு பொலன்னறுவையிலுள்ள அவரது இல்லத்தில் அஞ்சலி செலுத்திய பிரதமர், இராஜாங்க அமைச்சர் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொண்டார்.




அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ எஸ்.எம்.எஸ் செய்திச் சேவை மற்றும் நியூஸ் அலேர்ட் ஆகியன நேற்று முன்தினம் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டபோது...

# 7,95,000 ஆயிரம் வழக்குகள் நீதிமன்றங்களில் தேக்கம்

## பாராளுமன்றத்தில் நீதியமைச்சர் அலி சப்ரி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டிலுள்ள நீதிமன்றங்களில் 07 இலட்சத்து 95 ஆயிரம் வழக்குகள் உள்ளதாக நீதி அமைச்சர் அலி சப்ரி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் மேற்குறித்த அத்தனை வழக்குகளிலும்ஆஜராகும் சட்டத்தரணிகளின் விபரங்களை என்னால் சபையில் தெரிவிக்க முடியாது. அது எனது வேலையுமல்ல என பதிலளித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் எதிர்க்கட்சி எம்.பி சமிந்த விஜேசிறி குருநாகல் சர்ச்சைக்குரிய டாக்டர் ஷாபி தொடர்பில் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர்,

நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு தொடர்பில் சபையில் என்னால் பதில் சொல்ல முடியாது அது எனது பொறுப்புமல்ல. 06

**நாணயமாற்று**

| | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 |
| குவைத் டினார் | 603.09 |
| ஓமான் ரியால் | 483.42 |
| கட்டார் ரியால் | 50.73 |
| சவூதி ரியால் | 49.54 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

நீதிமன்றத்தில்

# விசாரணையிலுள்ள கூற்றை கூறியதாலே சபையில் அனுமதி வழங்கப்படவில்லை

## கஜேந்திரகுமார் தொடர்பில் சபாநாயகர் விளக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை கட்சித் தலைவராக சபை அங்கீகரித்துள்ளது. எனினும் நீதிமன்றத்தில் விசாரணையிலுள்ள வழக்கு தொடர்பில் அவர் கூற்று ஒன்றை முன்வைத்த காரணத்தினால்தான் அவரது கூற்றுக்கு சபையில் அனுமதி வழங்கவில்லையென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி எம்.பி நளின் பண்டார நேற்று முன்தினம் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு அவரது கூற்று ஒன்றை சபையில் சமர்ப்பிக்க அனுமதி வழங்காமை தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் விசேட கூற்று நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் என்ன? என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த சபாநாயகர்,..

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை கட்சித் தலைவராக அங்கீகரித்துள்ளோம், எனினும் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பான கூற்றொன்றைஅவர்முன்வைத்தகாரணத்தினால் தான் அவரது விசேட கூற்று நிராகரிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை சபை அமர்வுகளின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நளின் பண்டார ஒழுங்குப்பிரச்சினை எழுப்பி இந்த கேள்வியை எழுப்பினார்.

இதன்போது அவர் "27/2 இன் கீழ் கேள்வி எழுப்பப்பட்ட கேள்விக்கு இடமளிக்காது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நிராகரிக்கப்பட்டார். இதில் 76(1) இன் கீழ் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள காரணி என்ற கூற்று முன்வைக்கப்பட்டது. 06

# பின்னவல யானைகள் சரணாலயத்தை பின்னடையச் செய்வது நோக்கமல்ல

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பின்னவல யானைகள் சரணாலயத்தை மூடுவதோ அல்லது அதன் செயற்பாடுகளை பின்னடையச் செய்வதோ அரசாங்கத்தின் நோக்கம் அல்ல என்ன சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

மாறாக அது அபிவிருத்தி செய்யப்படும் என்றும் அதற்கான முறையான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார். கடந்த அரசாங்கம் அரசியல் பழிவாங்கல்களை மேற்கொண்டு திட்டங்களை செயல்படுத்தியது போலன்றி முறையான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஹேஷா விதானகே எம்.பி வாய்மூல விடைக்கான வினா வேளையில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

பின்னவலை யானைகள் சரணாலயத்தின் வருமானம் தொடர்பில் அவர் கேள்விகளை எழுப்பினார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்:

தெஹிவளை மிருகக்காட்சி சாலையில் மிருகங்களை அடைத்து வைக்கும் செயற்பாடு மிகப் பழமையானது.

அது தொடர்பில் மாற்றுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். விலங்குகள் தொடர்பில் விடயங்கள் தெரிந்த நிபுணர் குழு 06

# அமரர் பண்டாரநாயக்க நினைவு தினத்தை முன்னிட்டு வானொலியில் முத்தழகின் பாடல்கள்

அமரர் எஸ்.டபிள்யூ.ஆர். டி.பண்டாரநாயக்கவின் நினைவு நாளை முன்னிட்டு 1974இல் (46 வருடங்களாக) முத்தழகு சூரியகுமார் பாடியுள்ள பாடல்களை இன்று இலங்கை வானொலி தேசிய சேவையில் இரவு 7.00 மணிமுதல் ஒலிபரப்பாகும்.

ஒலிப்பரப்பு கூட்டுத்தாபன தலைவரும் இசையமைப்பாளருமான விசாரத ஜகத் விக்கிரமசிங்கவின் ஆலோசனையில் பேரில், தமிழ் சேவைப் பணிப்பாளர் ஆர்.கணபதிப் பிள்ளையின் நெறிப்படுத்தலில் நடைபெறும்.

பாடல்களை ஈழத்து இரத்தினம், யூ.எஸ்.ஹமீத்சாது, டாக்டர் அங்கவை எஸ். கணேசன் ஆகியோர் இயற்றியுள்ளனர். பாடல்களுக்கான இசையமைப்பை மெல்லிசை, திரையிசை இசையமைப்பாளர் கலாபூசணம் எம்.எஸ்.செல்வராஜா வழங்கியுள்ளார்.

# எஸ்.பி. பியின் மறைவுக்கு இ.தொ.கா அனுதாபம்

"பாடும் நிலா" என்று பலராலும் பாராட்டப்படும் அமரர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் மரணச் செய்தி எம்மை பெரிதும் துயரத்தில் ஆழ்த்தியிருக்கின்றது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் அந்த செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

40 ஆயிரத்திற்கு மேற்பட்ட பாடல்களை பல்வேறு மொழிகளிலும் பாடி இரசிகர் உள்ளங்களை ஈர்த்துக் கொண்டு 06

# பயங்கரவாதத்திற்கு எதிராக சார்க் நாடுகள் தீவிர நடவடிக்கை

## எடுக்க வேண்டுமென்கிறார் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்



பயங்கவாதத்துக்கு எதிராக 'சார்க்' எனப்படும் தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பை சேர்ந்த நாடுகள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் நிவ்யோர்க் நகரில் ஐக்கிய நாடுகள் சபையின் 75ஆவது ஆண்டு பொதுச் சபை கூட்டத்தை முன்னிட்டு நடைபெற்ற சார்க் நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர்,

எல்லை தாண்டிய பயங்கரவாதம், தொலை தொடர்பு இணைப்புகளை முடக்குவது, வர்த்தகத்தை தடுப்பது ஆகிய மூன்று சவால்களை சார்க் நாடுகள் எதிர்கொண்டு 06

# நாராயணசாமியின் நினைவஞ்சலி கூட்டமும் பகல் போஷன நிகழ்வும்



கொழும்பு, ஆமர் வீதி அம்பாள் கபே உரிமையாளரும் சமூக சேவையாளருமான அமரர் தொழிலதிபர் ஜி. நாராயணசாமியின் நினைவஞ்சலிக் கூட்டமும் பகல் போஷன நிகழ்வும் இன்று முற்பகல் 10.30 மணிக்கு கொழும்பு 13, புதுச் செட்டித் தெருவிலுள்ள ஸ்ரீ ராம் திருமண மண்டபத்தில் நடைபெறும் என இலங்கை, இந்திய தொடர்பாளர் மணவை அசோகன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்தாவது,


நாராயணசாமி சமூக தொண்டர், இறைபக்தர், ஏழைகளின் பங்காளர், உழைப்பின் சிகரம், பாசத்தின் உறைவிடம், பசித்தவர்களுக்கு புசிக்க ஆகாரம் அளித்த நடமாடிய மாமனித குல மாணிக்கம் என தெரிவித்துள்ள அவர், நாராயணசாமி ஐயா, இந்திய திருநாட்டில் தமிழ்நாடு தூத்துக்குடி மாவட்டத்தில் பிறந்தஊரான பரவளிக்கோட்டையில் அண்மையில் காலமானார். 06

# முல்லைத்தீவில் 836 கெக்டேயர் உவர் நிலம்

**பரந்தன் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை பயிர்ச் செய்கை மேற்கொள்ள அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் 836 கெக்டேயர் நிலப் பரப்பு பயிர் செய்கை மேற்கொள்ளமுடியாத உவர் நிலப் பகுதிகளாக காணப்படுவதாக மாவட்ட விவசாய திணைக்களத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் கொக்குத்தொடுவாய் நாயாறு மற்றும் நந்திகடலை அண்டிய பகுதிகளிலும் ஏனைய பிரதேசங்களில் 06






2001 இல் சமயப் பணிகளில் அமர்த்தப்பட்ட மதகுருமார்கள் சிலர் குருப்பட்டம் பெற்ற 19 ஆவது வருட நிறைவை அண்மையில் கந்தான சென். செபஸ்டியன் தேவாலயத்தில் நன்றி திருப்பலி ஒப்புக்கொடுத்து கொண்டாடினர். அவர்கள் மெழுகுவர்த்தி ஏற்றுவதை படத்தில் காண்க. அருட் தந்தைமாரான சமன், சுஜீவ, லோரன்ஸ், குயின்டஸ் சிசிர. சுரன், ஷெரோன், கிறிஸ்டோ சமிந்த ஆகியோர் இத்திருப்பலி பூஜையில் கலந்துகொண்டனர்.

தினகரன் THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834

தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 10ஆம் நாள் சனிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1442 சபர் பிறை 08

## குறள் தரும் சிந்தனை



மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்

மகன் தன் தந்தைக்குச் செய்யத் தக்க கைம்மாறு, இவன் தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தானோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும்.

# உழைப்புக்கேற்ப வருமானம் கோரும் உணவு உற்பத்தியாளர்கள்

மக்களின் அன்றாட பாவனைக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் கடந்த ஒருசில வாரங்களாக அதிகரித்திருப்பதைக் காண முடிகின்றது. நாட்டு மக்களின் பிரதான உணவுக்குரிய தானியமான அரிசியின் விலை அதிகரிக்காத போதிலும் தேங்காய், உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் காய்கறி வகைகளின் விலைகளே அதிகரித்தபடி செல்கின்றன.

அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ரமேஷ் பத்திரணவும் இந்த விலை அதிகரிப்புகள் தொடர்பாக சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின் போது குறிப்பிட்டிருக்கின்றார்.

தேங்காய் ஒன்று நூறு ரூபாவாகவும் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 160 ரூபாவாகவும் விற்கப்படுவது குறித்து அமைச்சர் ரமேஷ் பத்திரண அந்த செய்தியாளர் மாநாட்டின் போது சுட்டிக்காட்டியுள்ளார். அதேசமயம் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துச் செல்வது தொடர்பாக அரசாங்கம் விசேட கவனம் செலுத்தி ஆராய்ந்து வருவதாகவும் ரமேஷ் பத்திரண கூறியிருக்கின்றார்.

நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் வெகுவாக அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதேசமயம் நாட்டில் கொழும்பு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் ஒரு கிலோ காய்கறியை இருபது ரூபாவுக்கும் விற்பனை செய்து கொள்ள முடியாமல் உற்பத்தியாளர்கள் திண்டாடியதும் நினைவிருக்கின்றது. கொரோனா ஊரடங்கு காலத்தில் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் முப்பது ரூபா வரை ஒரு கிலோ காய்கறி விற்பனை செய்து கொண்டிருந்த வேளையில், கொழும்பு நகரில் ஒரு கிலோ மரக்கறியை அறுநூறு ரூபா கொடுத்து மக்கள் வாங்க வேண்டியிருந்தது.

ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டதையடுத்து காய்கறிகளின் விலைகள் படிப்படியாக வீழ்ச்சியடைந்தன. ஆனால் தற்போது அவற்றின் விலைகள் மீண்டும் படிப்படியாக அதிகரித்தபடி செல்கின்றன. உள்நாட்டு உற்பத்தியான காய்கறி மற்றும் உணவுப் பொருட்களே இவ்வாறு விலை அதிகரித்துச் செல்கின்றன.

கொரோனா அச்சுறுத்தல் தணிவடைந்த பின்னர், நாட்டில் உணவுப் பொருட்களின் உற்பத்தி கணிசமான அளவு அதிகரித்திருக்கின்றது. உற்பத்தி குறைவடையாத போதிலும், அவற்றின் விலைகள் அதிகரித்துச் செல்வதற்கான காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலேயே மக்களின் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

இந்நிலையில், உணவுப் பொருட்களின் உற்பத்தியாளர்களான விவசாயிகள் நீண்ட காலமாகவே வேதனையான குற்றச்சாட்டொன்றை முன்வைத்து வருகின்றனர். இக்குற்றச்சாட்டு குறித்து உரிய கவனம் எடுத்து அதனைத் தீர்த்து வைப்பதற்கு முன்னைய அரசாங்கங்கள் தீர்க்கமான நடவடிக்கைகளை இதுவரை மேற்கொள்ளாத காரணத்தினால் விவசாயிகளின் அப்பிரச்சினை இன்னுமே தீர்க்கப்படாமலேயே உள்ளது.

கிராமங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற காய்கறி முதலான உணவுப் பொருட்களை நியாய விலைக்கு விற்றுக் கொள்ள முடியாத பரிதாப நிலைமை தங்களுக்கு உள்ளதாக உற்பத்தியாளர்கள் நீண்ட காலமாகவே கூறி வருகின்றனர். நகர்ப் பகுதிகளில் இருந்து வாகனங்களில் வருகின்ற மொத்த வியாபாரிகள் மிகக் குறைந்த விலையிலேயே தங்களிடம் காய்கறிகளை வாங்கிச் செல்வதாகவும், அவற்றை அவர்கள் நகரங்களுக்குக் கொண்டு சென்று பத்து மடங்கு விலை அதிகரிப்புடன் விற்பனை செய்வதாகவும் உற்பத்தியாளர்கள் வேதனையுடன் கூறுகின்றனர்.

உற்பத்தியாளர்கள் தங்களது ஒரு கிலோ மரக்கறியை இருபது ரூபாவுக்கும் குறைவாகவே விற்பனை செய்ய வேண்டி ஏற்படுகின்றது. விவசாயிகளைப் பொறுத்த வரை தங்களது உற்பத்திப் பொருட்களை கொழும்பு மற்றும் நகரங்களுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு வழி கிடையாது. அதேசமயம் அறுவடை செய்த காய்கறிகளை பழுதடையாமல் வைத்திருக்கவும் முடியாது. உணவு உற்பத்தியாளர்களின் இவ்வாறான பலவீனமான நிலைமையை மொத்த வியாபாரிகள் நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர். மிகக் குறைந்த விலைக்கு அவற்றை விற்பனை செய்கின்ற உற்பத்தியாளர்களுக்கு இலாபம் கிடைப்பதில்லை. உழைப்புக்கேற்ற வருமானமின்றி அவர்கள் தொடர்ந்தும் வறுமையிலேயே வாடுகின்றனர். காய்கறிச் செய்கைக்காக செலவிட்ட பணத்தையே அவர்களால் மீளப் பெற்றுக் கொள்ள முடிவதில்லை. இது பெரும் அநீதி ஆகும்.

அரசாங்கம் இந்த விடயத்தில் தலையிட்டு உணவு உற்பத்தியாளர்களின் குறையைத் தீர்ப்பதில் நடவடிக்கை மேற்கொள்வது அவசியம். உணவுப் பொருட்களை உற்பத்தியாளர்களிடம் இருந்து நியாய விலையில் கொள்வனவு செய்ய வழியேற்படுத்தினால் போதும். விவசாயிகளின் துன்பமும் நீங்கி விடும்.

editor.tkn@lakehouse.lk

# நாட்டில் அரசியல் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் அமரர் பண்டாரநாயக்க

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபக தலைவரும் முன்னாள் பிரதமருமான எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் 61 வது நினைவு தினம் இன்றாகும். இலங்கை வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் தனித்துவமிக்க அரசியல் தலைவராக விளங்கியவர் அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க ஆவார். இவர் நாட்டின் சமூக, கலாசார, பொருளாதார மற்றும் அரசியல் துறைகளின் மறுமலர்ச்சிக்கு அளித்துள்ள பங்களிப்புக்கள் அழியாத் தடம் பதித்திருக்கின்றன.

அவர் மறைந்து ஆறு தசாப்தமாகியுள்ள போதும், இன்றும் நினைவு கூரப்படுகிறார்.

அமரர் பண்டாரநாயக்க 1899 ஜனவரி 8 ஆம் திகதி ஹொரகொல்லவில் பிறந்தார். செல்வச் செழிப்புமிக்க மகாமுதலி சேர் சொலமன் டயஸ் பண்டாரநாயக்கவுக்கும், டெஸி எஸிலின் ஒபேசேகரவுக்கும் மகனாக அவர் பிறந்தார்.

கல்கிசை சென். தோமஸ் கல்லூரியில் இரு மொழி கல்வி பெற்றார். இக்கல்வியை பூர்த்தி செய்த பண்டாரநாயக்க, 1919 இல் இங்கிலாந்து சென்று ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் இணைந்து சட்டத் துறையில் உயர் கல்வியைத் தொடர்ந்தார். பல்கலைக்கழக காலத்தில் அவர் ஏனைய துறைகளிலும் தமது திறமைகளை வெளிப்படுத்தினார்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் கற்ற பண்டாரநாயக்க பரிஸ்டர் பட்டத்தை பெற்று 1925 பெப்ரவரி 27 ஆம் திகதி தாயகம் திரும்பினார். தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் போது உரையாற்றிய பண்டாரநாயக்க, தமது நாடு காலனியாதிக்கத்துக்கு உட்பட்டிருப்பதால் மக்களும் நாடும் அனுபவிக்கும் வேதனையை சுட்டிக்காட்டியதோடு அவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்கான முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார்.

'நாட்டுக்காக அரசியலைத் தெரிவு செய்ய மக்கள் விரும்புவார்களாயின் தாம் மக்களை ஆளும் ஆட்சியாளனாகவன்றி மக்கள் சேவகனாக கடமையாற்ற தயாராக உள்ளேன்' என்றார்.

இந்நாட்டை பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுவிப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் அவர் சிந்திக்கத் தொடங்கினார். இதற்கென மக்கள் மத்தியில் தேசிய சிந்தனையை கட்டியெழுப்புவதன் அவசியத்தையும் உணர்ந்து அன்றைய காலகட்டத்தில் செயற்பாட்டிலிருந்த இலங்கை தேசிய சங்கத்திலும் அவர் இணைந்து தீவிரமாக செயற்படலானார்.

1926 டிசம்பர் 14ஆம் திகதி கொழும்பு மாநகரசபைக்கு நடைபெற்ற தேர்தலில் மருதானை வட்டாரத்தில் இவர் போட்டியிட, இவருக்கு எதிராக தொழிற்சங்கத் தலைவர் ஈ. ஏ. குணசிங்க தேர்தலில் களமிறங்கினார். 615 மேலதிக வாக்குகளால் குணசிங்கவை தோற்கடித்து இவர் மாநகர சபை உறுப்பினரானார். அதனூடாக நேரடி அரசியலில் பிரவேசித்த இவர், மக்கள் சேவகனாக மாறினார். மாநகர சபை உறுப்பினராக பதவி வகித்த காலத்தில் மக்கள் சேவைக்கு அளித்த முன்னுரிமை காரணமாக மக்களின் விருப்பத்திற்குரிய தலைவராக மாறினார் பண்டாரநாயக்கா.

இவ்வாறான சூழலில் 1931 மே 04 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் வெயாங்கொட தொகுதியில் போட்டியிட்டு அரச பிரதிநிதிகள் சபைக்கு இவர் தெரிவானார். அதனைத் தொடர்ந்து அரசியலின் ஊடாக நாட்டினும் மக்களினும் சுபீட்சத்திற்காகவும் சுதந்திரத்திற்காகவும் தொடர்ந்து உழைக்கலானார்.

இவர் 1940 ஒக்டோபர் 03 ஆம் திகதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவை திருமணம் செய்து குடும்ப வாழ்வில் பிரவேசித்தார். அதனூடாக இவருக்கு இரண்டு பெண் குழந்தைகளும் ஒரு ஆண் குழந்தையும் கிடைக்கப் பெற்றனர். இவர்களில் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க பிற்காலத்தில் இந்நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டார். அநுர பண்டாரநாயக்க பிற்காலத்தில் இந்நாட்டின் சபாநாயகரானார். சுனேத்ரா பண்டாரநாயக்க இந்நாட்டின் முன்னணி சமூக செயற்பாட்டாளராக விளங்குகிறார்.



61 வது நினைவு தினம் இன்று

பண்டாரநாயக்க 'எனக்கு முதல் நாடு' என்ற எண்ணக்கருவை இந்நாட்டுக்கு அறிமுகப்படுத்தினார். இந்த நிலையில் 1945 ஜனவரி 19ஆம் திகதியன்று 'சுதந்திர இலங்கைச் சட்டத்தை அவர் அரச பேரவைக்கு கொண்டுவந்தார். அது தனித்துவமிக்க சுயாதீனமான இலங்கைக்கான முதலாவது ஆவணமாகும். இந்த ஆவணம் இந்நாட்டு சுதந்திரத்தின் தேவையையும் தனித்துவத்தையும் எடுத்துக்காட்டக் கூடியதாக விளங்கியது. பிரித்தானியர் அச்சட்டத்திற்காக இலங்கைக்கு உடனடியாக சுதந்திரத்தை வழங்க முன்வரவில்லை. ஆனாலும் நாலாண்டுகள் கடந்த நிலையில் 1948 பெப்ரவரி 04 ஆம் திகதி இந்நாட்டுக்கு சுதந்திரம் வழங்கினர். அது டொமினியன் அந்தஸ்து கொண்ட சுதந்திரமாகவே இருந்தது.

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமராக டி. எஸ் சேனநாயக்க பதவியேற்றார். அவர் தலைமையிலான அரசாங்கத்தில் இவர் சுகாதாரம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பதவியேற்றார். இந்நாட்டுக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தை பண்டாரநாயக்க விமர்சனக் கண்கொண்டுதான் நோக்கினார். இது தொடர்பில் அவர் 'பௌதீக ரீதியில் நாடு பெற்றுக் கொண்ட பேரளவிலான சுதந்திரம்' என்று அடிக்கடி கூறலானார்.

நாட்டின் சுதந்திரம், தனித்துவம் தொடர்பில் கொண்டிருந்த பார்வையின் அடிப்படையில் டி.எஸ். சேனநாயக்கவின் அரசிலிருந்து 1951 ஜுலை 12 ஆம் திகதி பண்டாரநாயக்க வெளியேறி எதிரணிக்கு சென்றார். அவருடன் அமரர் டி.ஏ. ராஜபக்ஷவும் இணைந்து சென்றார். அதன் பின்னர் மேலும் சிலர் எதிரணிக்கு சென்றனர்.

இவர்கள் ஒன்றிணைந்து 1951 செப்டம்பர் முதலாம் திகதி கண்டியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். அவர்களுடன் கலாநிதி பதியுதீன் மஹ்மூத், எஸ். தங்கராசா, ரி.பி இலங்கரத்ன உள்ளிட்ட மேலும் பல முக்கியஸ்தர்கள் அன்று இணைந்து கொண்டனர். அங்கு கட்சிக்கான ஆட்சேர்ப்பும் இடம்பெற்றது.

மறுநாளான 1951 செப்டம்பர் 02 ஆம் திகதி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இக்கட்சியை நாடெங்கிலும் மக்கள் மத்தியில் பரவலாக்குவதற்காக பண்டாரநாயக்கவும் அவரது தோழர்களும் இரவு பகல் பாராது அயராது உழைத்தனர். இதன் பயனாக கட்சி அமைக்கப்பட்ட ஒரு வருட காலப்பகுதிக்குள் நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்டு முதன் முறையாக 08 ஆசனங்களை வென்றெடுத்தது ஸ்ரீ.லசு.க. அவர்களில் பண்டாரநாயக்கவும், டி.ஏ ராஜபக்ஷவும் அடங்கியிருந்தனர். அந்த 8 ஆசனங்களையும் கொண்டு எதிர்க்கட்சி அரசியலினூடாக நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் ஸ்ரீ.ல.சுதந்திர கட்சி ஆற்றிய சேவைகளின் பயனாக சொற்ப காலத்தில் ஆட்சிபீடமேறும் கட்சியென்ற அந்தஸ்தை அக்கட்சி பெற்றுக் கொண்டது.

1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஸ்ரீல.சு.கட்சி தலைமையிலான கூட்டணி வெற்றிபெற்று ஆட்சிபீடமேறியதோடு இந்நாட்டின் மூன்றாவது பிரதமராக எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க பதவியேற்றார். அந்த அரசாங்கத்தில் டி.ஏ. ராஜபக்ஷ நிலங்கள் மற்றும் நில மேம்பாட்டு அமைச்சின் நாடாளுமன்ற செயலாளராக நியமிக்கப்பட்டார். பண்டாரநாயக்க தலைமையிலான அரசாங்கம் பதவிக்கு வந்ததும் கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் திருகோணமலை சீனக்குடாவில் விமானப்படை முகாம்களை அகற்றியதோடு அங்கு பறந்து கொண்டிருந்த பிரித்தானியகொடிகளை இறக்கி, இந்நாட்டின் சிங்கக் கொடியைப் பறக்க விட்டார்.

(06ஆம் பக்கம் பார்க்க)

மர்லின் மரிக்கார்...

# வாழ்க்கையில் அழியாத அனுபவத்தை நீங்கள் கண்டு கொள்வது சாத்தியம்

## பிரேம் ராவத் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள்...

நீங்கள் எங்கிருந்தாலும் உண்மையான மகிழ்ச்சி உங்களின் உள்ளேதான் இருக்கின்றது. நீங்கள் விரும்பினால் உங்களுக்குள் இருக்கும் அந்த சுரங்கத்தை தோண்டி மனிதனைச் செல்வந்தனாக்கும் பொக்கிஷத்தைக் கண்டு கொள்ள முடியும். இவ்வுலகில் சில மக்கள் தாம் செல்வந்தர்களாக திகழ்வதற்குப் பணம் அவசியம் என நினைக்கின்றனர். வேறு சிலரோ நல்ல உள்ளம் இருந்தால் தாம் செல்வந்தரென நினைக்கின்றனர்.

ஒருவன் உண்மையான செல்வந்தனாக வேண்டுமெனில் அவன் ஞான வழிமுறையை தெரிந்து கொள்ள வேண்டும். அவன் உள்ளத்தில் மகிழ்ச்சி இருக்க வேண்டும். உள்ளே உள்ள இறை சக்தியுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். அவன் தன்னைத்தானே முதலில் அறிந்து கொள்ள வேண்டும். அந்த இறை சக்தியை தன்னுள்ளே கண்டு கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அவன் உண்மையான செல்வந்தனாக முடியும்.

பணத்தினால் செல்வந்தனான ஒருவன் இவ்வுலகை விட்டு நீங்கும் போது தன்னுடன் பணத்தை எடுத்துச் செல்ல முடியாது. ஆனால் ஆனந்த அனுபவத்தை தன்னுடன் கொண்டு செல்லமுடியும். ஒவ்வொரு மனிதனுக்கும் மகிழ்ச்சியால் நிரம்பியிருக்கவும், இறை சக்தியை அறிந்து கொள்ளவும், அதனைக் கண்டு கொள்வதற்குமான சாத்தியங்கள் உள்ளன.

இவ்வுலகில், ஒருவன் நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் தன்னுள்ளே உள்ள சுரங்கத்தை தோண்டுவதில் ஈடுபட்டு பேரின்பத்தை அனுபவிப்பதில் மூழ்கி இருக்கின்றான். அவனிடம் எதுவித கவலையும் கிடையாது. இறை நாமத்தைப் பற்றி சிந்திப்பதிலேயே தன் வாழ்க்கையைக் கழிக்கின்றான். இறை நாமத்தை சிந்திக்காதவன் காலன் கைப்பிடியில் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தனது வயிற்றை நிரப்புவதற்காக தொழிலையும் விசுவாசமாகச் செய்கின்றான். உணவில்லாமல் எந்த செயலையும் செய்ய முடியாதல்லவா! அவனது வாழ்வின் இலட்சியம் தன்னுள் உள்ள சுரங்கத்தை தோண்டி இன்பத்தை கண்டுகொள்வதிலேயே இருக்கின்றது. இந்த உலக விடயங்களில் ஏற்படும் வெற்றியோ அன்றி தோல்வியோ அவனிடம் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை. மனிதனுக்கு உணவு, உடை, வதிவிடம் அவசியம். அதற்காக அவன் தொழில் செய்யத்தான் வேண்டும். உழைப்பின்றி இவ்வுலகில் வாழமுடியாது. எனினும் நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் அவனுள் உள்ள சுரங்கத்தை தோண்டுவதில் செலவிடுகின்றான். அதனால் தங்கம், வைரம் போன்றவற்றிலும் பார்க்க பெறுமதி வாய்ந்த பொக்கிஷத்தை தன் வாழ்வில் கண்டு கொள்கின்றான்.



மற்றொருவன் தன் வாழ்நாள் முழுவதும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றான். இந்த உலகில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்று மும்முரமாக பணியாற்றுகின்றான். எனினும் பல சமயம் அவனால் அதை நிறைவேற்ற முடியாமல் தவிக்கின்றான். தனது அத்தியாவசியத் தேவைகளுக்கான போதிய வருமானம் இருந்தும் அவனால் கவலைப்படாமல் அமைதியாக இருக்க முடிவதில்லை.

இந்த இரண்டு சாத்தியங்களும் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. ஒருவன் தனக்குள்ளே வந்து போகும் ஒவ்வொரு மூச்சையும் விலைமதிக்க முடியாத பரிசென அறிந்துள்ளான். அதை எப்பொழுதும் கண்டு கொள்ள முயற்சி செய்கின்றான். மற்றொருவன் வந்து போய்க் கொண்டிருக்கும் மூச்சைப் பற்றி எந்தவித அக்கறையுமின்றி தான் தேடும் பொருள் தன்னுள்ளே இருக்கின்றது என்பது பற்றியும் அறியாதவனாக வாழ்க்கையை நடத்துகிறான். இந்த இருவருக்கும் என்ன நடைபெறப் போகின்றது? ஒருநாள் இருவரும் இந்த உலகை விட்டுப் போகத்தான் வேண்டும். இந்த உலகில் பிறந்த போது நாம் அழுதோம், உலகம் சிரித்தது. இப்பொழுது இந்த உலகத்தை விட்டுப் போகும் போது உலகத்தை அழவிட்டு நாம் மகிழ்ச்சியுடன் செல்ல வேண்டும்.

மேற்குறிப்பிட்ட இரு சாத்தியங்களில் ஒருவனால் இந்த உலகை விட்டு நீங்கும் போது, இந்த வாழ்க்கை கிடைத்ததற்காகவும், கிடைக்கப் பெற்ற ஒவ்வொரு மூச்சுக்காகவும் படைத்தவனுக்கு நன்றி என்று கூறிச் செல்ல முடியும். மற்றையவன் இப்பொழுதாவது துன்பம் விலகுகின்றதே என்ற நினைவிலேயே இவ்வுலகை விட்டு நீங்க முடியும். அவனுக்கு இதுவும் ஒரு வாழ்க்கையா என்றுதான் எண்ணத் தோன்றும்.

இந்த இருவரில் யாரை உங்களுக்கு பிடித்துள்ளது? ஒருவன் தன் உள்ளத்தை ஆனந்தத்தால் நிரப்பியுள்ளான். இவ்வுலகில் வெறும் கையுடன் பிறந்தாலும் இன்று அவன் கையில் ஞானஅறிவு, மகிழ்ச்சி, திருப்தி, நல்லுணர்வு மற்றும் நன்றியுணர்வு நிரம்பியுள்ளது. மற்றவனுடைய கையில் வெறுமை, துன்பம் மட்டுமே எஞ்சியுள்ளது. அப்படியே இவ்வுலகை விட்டு ஒருநாள் போய் விடுவான். நீங்கள் நன்றியுடனும் ஆனந்தத்துடனும் இவ்வுலகை விட்டுப் போக விரும்பினால் அதற்கான முயற்சியை இப்பொழுதே செய்யத் தொடங்குங்கள். வெறும் கையுடன் போக வேண்டும் என விரும்பினால் இப்பொழுது செய்து கொண்டிருப்பதையே செய்து கொண்டிருங்கள். துன்பத்துடனேதான் வாழ வேண்டியிருக்கும். வாழ்க்கையில் நன்றியுணர்வை வெளிப்படுத்த முடியாது.

கிணற்றை சுற்றி சுற்றிச் செல்லும் செக்குமாடு போல, எவ்வளவு முறைதான் சுற்றி வந்தாலும் மீண்டும் அதே இடத்தில் நிற்பது போல் ஆகி விடும். தான் நிறைய தூரம் கடந்து விட்டதாக அந்த செக்குமாடு நினைக்கும், ஆனால் கண்களை கட்டியுள்ள பட்டியை எடுத்த பின்னர்தான் அதே இடத்தில் நிற்பதை அந்த மாட்டினால் கண்டுகொள்ள முடியும். எந்த மாற்றமும் நடைபெறவில்லையென அப்பொழுதுதான் அதற்குத் தெரியவரும்.

இப்பொழுது கொரோனா தொற்றினால் மக்கள் தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். துன்பத்தில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் மேலும் துன்பத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் யாரெல்லாம் தமது உள்ளே உள்ள இறை சக்தியைஅனுபவிக்கவிரும்புகிறார்களோ அவர்கள் கவலைப்படுவதில்லை. ஆனந்தமாகவே நாட்களை கழிக்கின்றனர். நம் ஒவ்வொருவருக்கும் இதுபற்றிய சொந்த அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆனால் நான் எனது வாழ்க்கைக்கு என்றும் நன்றியுடையவனாக வாழவே விரும்புகின்றேன்.

இந்த இரண்டு சாத்தியங்களும் நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டிருந்தாலும் 'இறைவனின் விருப்பம் எதுவோ அதுவே நடைபெறுமென' மக்கள் கூறுகின்றனர். ஆனால் இறைவனோ தன்னையே உங்களின் உள்ளே வைத்து விட்டார். நீங்கள் அந்த இறைவனை உங்களினுள்ளே தேடிக் கண்டு கொள்ள முடியும். இதைவிட அருகாமையில் வேறு யாருமே இருக்க முடியாது.

**மேலதிக விபரங்களுக்கு:**

https://www.timelesstoday.tv/
https://www.tprf.org/peaceeducationprogram/
https://www.premrawat.com/engage/peakknowyourself
https://www.youtube.com/c/PremRawatOfficial/featured
Or WhatsApp +94777793140


தொகுப்பு:
இ.மனோகரன்...

# எமது பாரம்பரிய வாழ்க்கையை வெளிநாட்டு சக்திகளிடம் இருந்து பாதுகாக்க வேண்டும்

"நீதி மற்றும் தர்மத்தைக் கடைப்பிடிக்கும் நியாயமான சமூகமொன்றை மீளக்கட்டியெழுப்புவதே 'யுதுகம' அமைப்பின் நோக்கமாகும்" என்று யுதுகம அமைப்பின் தலைவரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினருமான கெவிந்து குமாரதுங்க கூறியுள்ளார். எமக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

**கேள்வி: ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் தேர்தல் வெற்றியின் பின்னணியில் யுதுகம அமைப்பு பெரும் பங்கு வகித்துள்ளது. அமைப்பின் பிரதான நோக்கம் இப்போது நிறைவேறியுள்ள நிலையில் யுதுகம அமைப்பின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகின்றது?**

**பதில்:** 2015 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தையடுத்தே யுதுகம அமைப்பு உருவாக்கப்பட்டது. எமது பிரதான நோக்கம் கண்ணுக்குத் தெரியாத வெளிச்சக்திகளை தோற்கடிப்பதாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியும், அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலமும் தேவைப்பட்டன. 2015 இல் மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட யுக்தி தொடர்பாக நாம் கவலையும் அச்சமும் அடைந்தோம். மஹிந்த ராஜபக்ஷவின் தோல்வியை விட அந்த யுத்திதான் எமக்கு அதிக கவலையைத் தந்தது. உதாரணத்துக்கு தெற்கு நெடுஞ்சாலை நிர்மாணத்தில் பெருமளவு ஊழல் இடம்பெற்றதாக பொதுமக்களின் மனதில் ஒரு கருத்து விதைக்கப்பட்டது.



## பொதுஜன பெரமுன எம்.பி கெவிந்து குமாரதுங்க பேட்டி

மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருந்த பல நன்மைகள் மறக்கச் செய்யப்பட்டன. ஊழலைப் பற்றி விசாரிப்பதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் பிழையாக முத்திரையிடுவதையும் அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளையும் எம்மால் பொறுத்துக் கொள்ள முடியாது. அப்போதைய எதிர்க்கட்சின் 2015 தேர்தல் பிரசாரம் முற்றிலும் பொறாமையுடனும் பழிவாங்கும் நோக்கத்துடனுமே மேற்கொள்ளப்பட்டது. இது முழுநாட்டுக்கும் தீங்கிழைப்பதாக இருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி பாரிய வெற்றியாகக் கருதப்படுகிறது. ஆனால் அது சூழ்ச்சி மூலம் பெறப்பட்டது.

**கேள்வி: எதிர்காலத்தில் அரசாங்கத்துடன் சேர்ந்து எவ்வாறு பணியாற்றப் போகிறீர்கள்?**

**பதில்:** நாங்கள் மக்களுக்கும் தலைவர்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருக்க விரும்புகிறோம். 2015 இல் ஆட்சி செய்த அரசாங்கத்தின் அனைத்து செயற்பாடுகளும் வெளிநாட்டு சக்திகளால் அரங்கேற்றப்பட்டவையாகும். ஜெனீவா சீர்திருத்தம் மற்றும் சில தீங்கான நிகழ்வுகள், ஒப்பந்தங்கள் நாட்டின் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டன. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ள ஒரு இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது போன்ற விடயங்களில் நாம் அரசாங்கத்துக்கு உதவுவோம். அந்தத் திட்டம் எமது சமூகத்தை மாற்றியமைக்கும். 'யுதுகம' அமைப்பு நூற்றுக்கு நூறு சரியானது என்று நாங்கள் கூற வரவில்லை. எங்களிலும் குறைகள் இருக்கலாம். ஆனால் எமது நோக்கம் எம்மை சரி செய்து கொண்டு சமூகத்துக்கு ஒரு உதாரணமாக இருப்பதேயாகும்.

**கேள்வி: பௌத்தத்தையும் சிங்கள சமூகத்தையும் பாதுகாக்கும் ஒருவராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கருதப்படுகிறார். இதனால் மற்றைய சமூகங்கள் அரசாங்கத்தின் நல்ல எண்ணங்களை சந்தேகக் கண்ணுடன் பார்ப்பதற்கு வழி வகுக்கும். இதனால் மேலும் சஹ்ரான்களும் பிரபாகரன்களும் உருவாக வழி ஏற்படுமே?**

**பதில்:** சிங்கள பௌத்தர்களைப் பாதுகாப்பதனால் ஜனாதிபதி சிறுபான்மையினருக்கு எதிராக செயற்படுவார் என்று கருத்தல்ல. எமது பாரம்பரிய வாழ்க்கையை நாம் வெளிநாட்டு சக்திகளிடம் இருந்து பாதுகாக்க வேண்டுமே தவிர, இங்குள்ள சிறுபான்மையினரிடம் இருந்து அல்ல. பெரும்பாலான சிங்கள பௌத்த சக்திகள் இம்முறை கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக தெரிவு செய்துள்ளன. அனைத்து சமூகங்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய நேரம் இது.

## 'மக்களுக்கும் தலைவர்களுக்கும் இடையே பாலமாக இருக்க விரும்புகிறோம்'

இரு தசாப்தங்களுக்குப் பிறகு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் யாழ் மாவட்டத்தில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரை தெரிவு செய்ய முடித்துள்ளது. அது நல்லதொரு மாற்றம். சிங்களம் அதிகாரபூர்வ மொழியாக பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் தமிழ் மக்கள் பிரதான அரசியல் நீரோட்டத்திலிருந்து வெளியேறி விட்டார்கள் என்பதில் எந்த உண்மையும் இல்லை. 1956 இல் ஸ்ரீல.சு. க அரசாங்கம் சிங்களத்தை அதிகாரபூர்வ மொழியாக்கியது.1976 இல் தான் சுட்டுக் கொல்லப்படும் வரை அல்பிரட் துரையப்பா யாழ்ப்பாண மேயராகவே இருந்தார். 1982 ஜனாதிபதித் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் அதிக வாக்குகளை பெற்றவர் ஸ்ரீல.சு.க வை சேர்ந்த ஹெக்டர் கொப்பேகடுவ. இந்த உதாரணங்களைப் பார்க்கும் போது இவ்வாறான செயற்பாடுகளால் தமிழ் மக்கள் அதிருப்தி கொள்ளவில்லை என்பதையே காண முடிகிறது.

**கேள்வி: தமிழ் பேசும் மக்களின் விடயங்கள் தொடர்பாக உங்கள் கருத்து என்ன?**

**பதில்:** அனைத்து மக்களுக்கும் பொதுவான பிரச்சினைகள் உள்ளன என்பதில் நாம் இணங்குகிறோம். ஆனால் தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமென பிரச்சினைகள் உள்ளனவா என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். 30 வருட காலம் பயங்கரவாத யுத்தத்தினால் பீடிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு குறிப்பிட்ட குறைபாடுகள் இருக்கலாம். உதாரணத்துக்கு சுமந்திரன் ஆங்கிலத்தை அரவணைக்கிறார். ஆனால் சிங்களத்தை வெறுக்கிறாரரா? சிங்களம் அவரது நாட்டின் தேசிய மொழி. அதனை அவர் எப்படி வெறுக்கலாம்? அவ்வாறான நிலைப்பாட்டில் அவர் இருந்தால் நம்மால் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஒருபோதும் காண முடியாது.

பல்கலைக்கழக தரப்படுத்தல் முறையைப் பொறுத்தவரை க.பொ.த விஞ்ஞான உயர் தரத்துடன் கூடிய பாடசாலைகள் கொழும்பில் இருந்ததை விட யாழ்ப்பாணத்திலேயே அதிகமாக இருந்தன. 1980 களில் மிகப் பெரிய மாவட்டமான அநுராதபுரத்தில் அவ்வாறான இரு பாடசாலைகள் மட்டுமே இருந்தன. இந்த பாகுபாடுதான் தரப்படுத்தல் முறை அறிமுகமாக காரணமாக இருந்தது. இது யாழ்ப்பாணத்தை மட்டுமல்ல கொழும்பையும் பாதித்தது. எனவே இந்த விடயம் இனரீதியாகப் பார்க்கப்படவில்லை என்பதே உண்மை. வடக்கில் உள்ள மாணவர்கள் இதனால் பல்கலைக்கழகங்களுக்கு செல்லும் வாய்ப்பு பறிக்கப்பட்டதாகக் கூற முடியாது. ஏனெனில் கிழக்கு மாகாணத்தில் இருந்து அதிக மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல இது உதவியது. இந்தியாவின் 'புரொன்ட்லைன்' சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் கருணா அம்மானும் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

மஞ்சுள பெர்னாண்டோ...
*தமிழில்: என். ராமலிங்கம்*

# புவியில் உயிர்வாழ்வு நிலைத்திருக்க வேண்டுமானால் அனைவரும் கைகோர்த்து செயற்படுவதே அவசியம்

புவி மேற்பரப்பிலிருந்து 12 கி.மீ தொடக்கம் 50 கி.மீ வரை ஒசோன் படையானது பரந்து காணப்படுகிறது. அது புவி மேற்பரப்பைப் பாதுகாக்கும் இயற்கைக் கவசமாகத் தொழிற்பட்டு சூரியனிலிருந்து வெளிப்படும் புறா ஊதாக் கதிர்களிலிருந்து புவியில் வாழும் உயிர்களைப் பாதுகாப்பதுடன் புவியின் வெப்ப நிலையைச் சீராகப் பேணுவதிலும் பங்களிப்புச் செய்கிறது. இந்த ஒசோன் படையானது நலிவடைந்து வருவதை 1970 களிலே விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். பல ஆய்வுகளின் பின்னர் ஒசோன் படையை அழிவடையச் செய்யும் இரசாயனப் பதார்த்தத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர்.

மனித நடவடிக்கைகளால் இரசாயனங்களாக சூழலை வந்தடையும் குளோரின், புறோமின் அணுக்களைக் கொண்ட அலசனேற்றப்பட்ட ஐதரோ காபன்களே ஓசோன் படையை நலிவடையச் செய்யும் பிரதான காரணிகளாகக் கண்டறியப்பட்டன. அத்தகைய பதார்த்தங்களின் உற்பத்தியையும் பாவனையையும் மெதுமெதுவாகக் குறைப்பதன் அவசியத்தை உணர்ந்து சில நாடுகள் ஒன்றிணைந்து 1985 ஆம் ஆண்டு வியன்னா மாநாட்டில் ஓசோன் படை நலிவடைதல் தொடர்பில் சில வசதிப்படுத்தல்களை மேற்கொண்டன.

வியன்னா உடன்படிக்கையானது, ஒசோன் நலிவடைதலைக் கிரமமாகக் கண்காணித்தல், அதனை நலிவடையச் செய்யும் பதார்த்தங்களைக் குறைத்தல், இவற்றுடன் தொடர்புடைய ஆய்வுகள் மற்றும் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றுக்காக அரசாங்கங்களுக்கிடையிலான ஒத்துழைப்பை வசதிப்படுத்துவதாக அமைந்தது. பின்னர் 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 47 நாடுகளின் கூட்டணி இணைந்து கனடா நாட்டின் மொன்ட்றியல் மாகாணத்திலே கூடியது. ஒசோன் படை நலிவடைவதைத் தடுப்பதற்காக உலகளாவிய முயற்சியை ஆரம்பிப்பதற்கான முதலடி அங்கே எடுத்து வைக்கப்பட்டது. இம்முயற்சியைச் சட்டபூர்வமாக்குவதும் உலகளாவிய ரீதியிலே சகல நாடுகளினதும் பங்குபற்றலைப் பெற்றுக் கொள்வதுமே இதன் பிரதானமான நோக்கங்களாகும். தற்போது 197 நாடுகள் இவ்வுடன்படிக்கையின் பங்காளர்களாக அங்கத்துவம் வகிப்பதன் மூலம் இன்றைய உலகில் அதிகளவு வெற்றி பெற்ற ஒப்பந்தங்களுள் ஒன்றாக மொன்றியல் ஒப்பந்தத்தை மாற்றியுள்ளன.

### ஆரோக்கிய மற்றும் சூழல் பிரச்சினைகள்:

ஒசோன் படை நலிவடைதலானது பரந்தளவிலான சூழல் மற்றும் ஆரோக்கியப் பிரச்சினைகளை உருவாக்கியிருக்கிறது. தோல் புற்றுநோய், கண் புரை, நோயெதிர்ப்பு சக்திக் குறைபாடு, பாரம்பரிய அலகுகளில் ஏற்படும் பிறழ்வுகள் என இன்னோரன்ன சுகாதாரப் பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன. அவை மட்டுமன்றி, சூழல் ரீதியாகப் பார்க்கும் போது அதிசக்தி மிகுந்த புறஊதாக் கதிர்கள் தாவரங்களின் வளர்ச்சியைப் பாதிக்குமென அறியப்பட்டுள்ளன. இப்புற ஊதாக் கதிர்கள் நீர்ப்பரப்பினுள் ஊடுருவி மீன்கள் , நீர்வாழிகளின் முட்டைகளை வேகமாக அழித்து விடுகின்றன. ஓசோன் படையை நலிவடையச் செய்யும் வாயுக்கள் பச்சை இல்ல வாயுக்களாகவும் தொழிற்பட வல்லவை. அவை ஒசோன் படையை நலிவடையச் செய்வதோடு மட்டுமல்லாமல், புவி வெப்பமயமாதலையும் ஏற்படுத்துகின்றன. வளிமண்டலத்தின் வெப்பநிலை அதிகரிக்க அதிகரிக்க காலநிலையும் வேகமாக மாற்றமடையும்.

### இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள்:

வியன்னா ஒப்பந்தம் மட்டுமல்லாது 1989 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி நடைமுறைக்கு வந்த மொன்ட்றியல் ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்ட இலங்கை, ஓசோன் படையைப் பாதுகாப்பதில் குறிப்பிடத்தகு பங்களிப்பை வழங்கியுள்ளது. ஒசோன் படையைப் பாதிக்கும் வாயுப் பதார்த்தங்களான குளோரோ புளோரோ காபன்கள் (CFCs), ஐதரோ குளோரோ புளோரோ காபன்கள் ஆகியன (HCFCs) குளிர்சாதனப்பெட்டிகளின் குளிரூட்டிகளாகவும் வளிச் சீராக்கிகளிலும் பயன்படுகின்றன. ஓசோன் படையை நலிவடையச் செய்யும் இத்தகைய 96 வாயுப் பதார்த்தங்கள் இதுவரை அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் 56 பதார்த்தங்களின் உற்பத்தியும் பாவனையும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 40 ஐதரோ குளோரோ காபன்களையும் இல்லாதொழிக்கும் செயற்றிட்டங்கள் 2013 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2030 அளவில் நிறைவடையுமெனெ எதிர்பார்க்கப்படுகின்றது.


2013 இலிருந்து மேற்கொள்ளப்படும் ஐதரோகுளோரோ காபன்களை இல்லாதொழிக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 9 மாகாணங்களிலும் குளிரூட்டி வாயு மீட்பு மற்றும் சீர்படுத்தல் நிலையங்கள் அமைக்கப்பட்டன. இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டதால் வளிமண்டலத்தில் வெளிவிடப்படும் வாயுக்களின் அளவும் அவ் வாயுக்களால் ஏற்படும் சூழல் பாதிப்புகளும் குறைவடைவதுடன் குளிர்சாதனப் பெட்டிகள் சார்ந்த புதிய சந்தை வாய்ப்பும் உருவாகியுள்ளது. அதாவது பழைய குளிர்சாதனப் பெட்டிகளுக்கான சந்தை மட்டுமன்றி சூழல் தரங்களுக்கேற்ற நியமங்களைப் பின்பற்றுவதற்கான செலவு குறைந்ததுடன் புதிய குளிர்சாதனப் பெட்டிகளுக்கான தேவையும் குறைவடைந்து குளிர்சாதனப் பெட்டிகளின் ஆயுட்காலம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

குளிரூட்டல் மற்றும் வளிச் சீராக்கல் சேவைகளில் பொருத்தமான உபகரணங்களையும் கருவிகளையும் பாவித்தல் அவசியம்.


கிடைக்கப் பெற்ற அமைச்சரவை அனுமதிக்கமைய குளிரூட்டல் மற்றும் வளிச் சீராக்கல் சேவைகளை வழங்கும் போது நிறுவனங்கள் பொருத்தமான கருவிகளையும் உபகரணங்களையும் பாவிப்பது 01.01.2019 இலிருந்து கட்டாயமாக்கப்பட்டது. ஐதரோ புளோரோ காபன் பதார்த்தங்களை இல்லாதொழிக்கும் இலங்கையின் செயற்பாட்டை வலுப்படுத்துமுகமாகவே இந்நடைமுறையானது அமுலுக்கு வந்தது. அத்தகைய சேவை வழங்குநர்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கான கட்டாயத் தேவையாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை நிர்ணயித்திருக்கிறது.

### குளிரூட்டல் மற்றும் வளிச் சீராக்கி சேவைத் துறைகளில் பணிபுரியும் தொழில் நுட்பவியலாளர்களின் தரவுத்தளம்:

இலங்கையில் ஒசோன் படையை நலிவாக்கும், புவி வெப்பமயமாதலைக் கூட்டும் இரசாயனங்களின் பாவனையில் முன்னணி வகிக்கும் துறைகளில் குளிரூட்டல் மற்றும் வளிச் சீராக்கி சேவைத் துறையும் ஒன்றாகும். அத்துடன் இத்துறைகளில் உள்ள தொழில்நுட்பவியலாளர்கள் அவ்விரசாயனங்கள் தொடர்பிலும் அவற்றின் பாவனையால் ஏற்படும் தீங்குகள் தொடர்பிலும் போதிய அறிவைக் கொண்டிருப்பதில்லையென்பதால் அவ்விரசாயனங்களை எந்தவித பரிகரிப்புமின்றி வளிமண்டலத்தில் கலக்க விடுகின்றனர். அப்பிரச்சினையைத் தீர்க்குமுகமாக சுற்றாடல் அமைச்சானது இலங்கைமுழுவதுமுள்ள அத்தொழில்நுட்பவியலாளர்களின் விபரங்களைச் சேகரிப்பதற்காக தரவுத்தளமொன்றை விருத்தி செய்து வருகிறது. அதன் முதற்கட்டமாக தேசிய ஓசோன் அலகானது இலங்கை முழுவதுமுள்ள பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள குளிரூட்டல் மற்றும் வளிச் சீராக்கி சேவை வழங்குநர்களின் விபரங்கள் கொண்ட தரவுத் தளத்தை உருவாக்கியுள்ளது.




## ஓசோன் படை சிதைவடைவதை கட்டுப்படுத்த இலங்கை ஆற்றி வரும் பெரும் பங்களிப்பு




### ஒசோன் படைக்குப் பாதகமான இரசாயனங்களின் பாவனை தொடர்பில் ஒழுங்குவிதிகளை உருவாக்குதலும் இச்சேவைகளைச் சான்றுப்படுத்தலும்:

இலங்கை கைச்சாத்திட்ட சர்வதேச உடன்படிக்கைகளுக்கமைய ஒசோன் படைக்குப் பாதகமான இரசாயனங்களின் பாவனை தொடர்பில் ஒழுங்குவிதிகளை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை தேசிய ஓசோன் அலகு மேற்கொண்டுள்ளது. அத்துடன் வழங்குநர்களால் மேற்கொள்ளப்படும் குளிரூட்டல் மற்றும் வளிச் சீராக்கி சேவைகளை உத்தியோகபூர்வமாக சான்றுப்படுத்தும் முறைமை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான தனிநபர் தொழில்நுட்பவியலாளர்கள் முறையான பயிற்சியைப் பெற்றுக் கொள்ளாதவர்கள். ஆயினும் அனுபவத்தாலும் முறைசாராப் பயிற்சிகளாலும் இச்சேவையை வழங்கும் திறனைப் பெற்றவர்களாகவே காணப்படுகின்றனர். குளிர்சாதனப் பெட்டி, வளிச்சீராக்கி பழுதுபார்த்தல், சூழல்நேய நுட்பங்கள் தொடர்பிலான தேசிய பட்டறைகள் மூலம் அவர்களுடைய அறிவும் திறனும் முறையே மதிப்பீடு செய்யப்பட்டு பரீட்சையில் தேர்வடைபவர்களுக்கு உரிய தரத்துக்குரிய தொழிற்கல்வித் தராதரச் சான்றிதழானது கற்றலை அங்கீகரித்தல் முறைமையின் மூலம் வழங்கப்படும்.

### கிகாலி திருத்தத்தில் கைச்சாத்திடல்:

மொன்ட்றியல் உடன்படிக்கையின் அண்மைய திருத்தமாகிய கிகாலி திருத்தத்தில் 2016 ஆம் ஆண்டு இலங்கை கைச்சாத்திட்டது. அதன் பின்னர் நாட்டின் தொழிற்றுறையும் பொருளாதாரமும் பாதிக்கப்படா வண்ணம் ஐதரோகாபன்களின் பாவனையை மட்டுப்படுத்துவது தொடர்பில் விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் தேவையான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன. கிகாலி திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்திச் செயற்றிட்டமும் ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் செயற்றிட்டமும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. மொறட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்து இலங்கையின் தேவைகளைக் கருத்தில் கொண்டு செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கான மதிப்பீட்டறிக்கை தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### ஐதரோ குளோரோ காபனைக் குறைப்பதற்கான தயார்படுத்தல் கட்டம் 2:

கட்டம் 1 இற்குரிய ஐதரோகுளோரோ காபன் பாவனை 2020 உடன் நிறைவு பெறுகிறது. அதைத் தொடர்ந்து 2020 ஆம் ஆண்டுக்கும் 2030 ஆம் ஆண்டுக்குமுரிய ஐதரோகுளோரோ காபன் பாவனை கட்டம் 2இற்குரியதாகிறது. அதன்படி, 2020 ஆம் ஆண்டுக்கும் 2025 ஆம் ஆண்டுக்கும் இடையே 35 சதவீதத்தாலும் 2025 ஆம் ஆண்டுக்கும் 2030 ஆம் ஆண்டுக்குமிடையே 67.5 சதவீதத்தாலும் 2030 ஆம் ஆண்டளவில் 100 சதவீதத்தாலும் குறைக்கப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மொன்ட்றியல் ஒப்பந்தத்தின் தாபக தினத்தைக் கொண்டாடும் வகையிலே ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதியை சர்வதேச ஒசோன் தினமாகக் கொண்டாடும் வண்ணம் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்திலே 1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் ஒவ்வொரு நாடும் உலக ஓசோன் தினத்தை வருடாந்தம் செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி பல்வேறுபட்ட தொனிப்பொருட்களில் கொண்டாடி வருகின்றன. இந்த வருடத்துடன் வியன்னா உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து 35 வருடங்களாகின்றன. அத்துடன் ஒசோன் படையைப் பாதுகாப்பதற்காக உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படத் தொடங்கியும் 35 வருடங்களாகின்றன.

ஓசோன் படையை நலிவடையச் செய்யும் பதார்த்தங்களின் பாவனை மற்றும் உற்பத்தியை 98 சதவீதத்தால் குறைப்பதற்காக மொன்ட்றியல் உடன்படிக்கையின் கீழ் அரசாங்கங்கள், விஞ்ஞானிகள், தொழிற்றுறை ஆகிய அனைத்து தரப்புகளும் ஒன்றிணைந்து ஒருங்கே இணைத்து செயற்படுகிறார்கள். இதன் மூலம் ஒசோன் படையானது 1980 க்கு முன்னர் இருந்த மட்டத்துக்கு மீளச் செல்லுமென எதிர்பார்க்கப்படுகிறது. பல தடவைகள் மீளத்திருத்தப்பட்ட மொன்ட்றியல் உடன்படிக்கையின் இறுதித் திருத்தமான கிகாலி திருத்தமானது 2019 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்பட ஆரம்பிக்கப்பட்டது. ஒசோன் படையை நலிவடையச் செய்யும் ஐதரோ குளோரோ காபன் களைப் பிரதியீடு செய்யும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட, புவி வெப்பமயமாதலைத் தூண்டும் வல்லமை அதிகமுள்ள ஐதரோபுளோரோ காபன்களின் உற்பத்தியையும் பாவனையையும் குறைப்பதே இதன் நோக்கமாகும்.

உலக நாடுகளைப் போல இலங்கையும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தால் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட 'வாழ்வுக்கான ஒசோன் ' எனும் தொனிப்பொருளிலே உலக ஒசோன் தினத்தை கொண்டாடியது. சுற்றாடல் அமைச்சினால் இணையவழிப் போட்டிகள் மட்டுமன்றி கலந்துரையாடல்கள் பலவும் நடைபெற்றன. பிரதான நிகழ்வானது கடந்த 16 ஆம் திகதி பத்தரமுல்லவில் அமைந்துள்ள 'அபே கம' நாடக அரங்கிலே நடைபெற்றது. சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர பிரதம விருந்தினராகவும் ஒசோன் படையை பாதுகாப்பதில் பங்காளர்களாக இருந்த ஏனைய அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசாங்கங்களுக்கிடையிலான நிறுவனங்களின் பிரதிநிதிகள் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். அத்துடன் இலங்கையின் தொழில்நுட்பக் கல்லூரிகளின் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

(சுற்றாடல் அமைச்சு)

## இலங்கையில் இதுவரை...

தடுக்கும் தேசிய மையம் தெரிவித்துள்ளது. நேற்று மாத்திரம் 1612 பி.சி.ஆர்.சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இதற்கமைய இலங்கையில் நடத்தப்பட்ட மொத்த சோதனைகளின் எண்ணிக்கை 2,75,000 யை கடந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் அபாய நிலைமை இன்னும் குறைவடையவில்லையென விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதேபோன்று சுகாதார அமைச்சும், கொரோனா வைரஸ் தொடர்பான சுகாதார நடைமுறைகளை தொடர்ந்து பின்பற்றுமாறு மக்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளது.

இலங்கையில் இதுவரை 3,327 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 3,142 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், 172 கொரோனா தொற்றாளர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இலங்கையில் கொரோனா தொற்றினால் இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இணையத்தள ஊடகவியலாளருக்கு...

சந்தேகநபர் நீதிபதிகள் மற்றும் நாட்டின் நீதிப் பொறிமுறையை அவமதிக்கும் விதமாக கட்டுரைகளை வெளியிட்டமை தொடர்பில் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். லங்கா நியூஸ் வெப் ஓஆர்ஜி எனும் இணையத்தளத்தின் நிர்வாகியாக செயற்பட்ட டெஸ்மன் சத்துரங்க டி அல்விஸ் என்பவரே சந்தேக நபராவார்.

மேற்குறிப்பிடப்பட்ட திகதியில் சந்தேக நபரை பிணையில் விடுவதா? இல்லையா? என்பதை பிரதம நீதிவான் தனது தீர்மானத்தை அறிவிப்பதாகத் தெரிவித்தார். இவ் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சந்தேக நபரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிவானிடம் பிணை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு புனித வின்சன்ட்...

இந்த நடைபவனியில் பாடசாலையின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

1820ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு புனித வின்சன்ட் மகளிர் உயர் தேசிய பாடசாலையானது இலங்கையில் மிகவும் பழமையான பெண்கள் பாடசாலையென்பதுடன் புகழ்பூத்த பாடசாலையாகவும் இருந்து வருகின்றது.

பல கல்விமான்களை உருவாக்கிய இந்த பாடசாலையின் 200ஆவது ஆண்டினை சிறப்பிக்கும் வகையில் மட்டக்களப்பு, கல்லடி பாலத்தருகில் ஆரம்பமான இந்த நடைபவனியானது மட்டக்களப்பு பிரதான வீதியூடாக நகரை சென்றடைந்து அங்கிருந்து பாடசாலையினை சென்றடைந்தது. பல்வேறு கலாசார பண்பாடுகளை தாங்கியவாறும் பாடசாலையின் நினைவுகளை சுமந்தவாறும் இந்த நடைபவனி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மிலிந்த மொரகொட உட்பட எட்டு...

இலங்கை உயர்ஸ்தானிகராகவும், ஓய்வுபெற்ற அட்மிரல் கே.கே.வி.பி. ஹரிஸ்சந்திர சில்வா ஆப்கானிஸ்தானுக்கான இலங்கை தூதுவராகவும் நியமிக்கப்படவுள்ளனர்.

ஜப்பானுக்கான இலங்கையின் புதிய தூதுவராக விஷ்ரமால் சஞ்ஜீவ குணசேகர நியமிக்கப்படவுள்ளதுடன், இந்தியாவிற்கான இலங்கையின் புதிய உயர்ஸ்தானிகராக மிலிந்த மொறகொடவும், அமெரிக்காவிற்கான இலங்கை தூதுவராக ரவிநாத் ஆரியசிங்கவும் நியமிக்கப்படவுள்ளனர். இதேவேளை, பேராசிரியர் ஷனிக்கா ஹிரிபுரேகமவை பிரான்ஸிற்கான இலங்கை தூதுவராகவும், கலாநிதி பாலித்த கொஹனவை சீனாவிற்கான இலங்கை தூதுவராகவும் நியமிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சம்பந்தனுக்கு சுகவீனம்...

வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த சில தினங்களாக உடல் நலப்பாதிப்பிற்குள்ளான இரா.சம்பந்தன் கொழும்பிலுள்ள அவரது சொகுசு பங்களாவில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

அவரை வீட்டை விட்டு வெளியேற வேண்டாமென மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். அதனால் பாராளுமன்ற அமர்வுகளிலும் கலந்து கொள்ளாமல், வீட்டிலேயே தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பந்தனின் உடல் நல குறைவால், தமிழ் தேசிய கூட்டமைப்பின் புதிய பேச்சாளர் தெரிவு தாமதமாகி வருகிறது. கடந்த 22ஆம் திகதி நாடாளுமன்றம் கூடி, புதிய பேச்சாளரை தெரிவு செய்வதென தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் சம்பந்தனின் உடல் நல குறைவினால் கூட்டம் நடைபெறவில்லை.

## 20 க்கு எதிரான மனுக்களை...

பிரியந்த ஜயவர்தன,விஜித் மலல்கொட,சிசிர டி அப்ரூ. 20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் செப்டம்பர் 29 ஆம் திகதி பரிசீலிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சியில் முதிரை...

நேற்றுக் காலை (25) இடம்பெற்றுள்ளதாக பூநகரி புலனாய்வு பொலிசார் தெரிவித்தனர்.

பூநகரி முழங்காவில் ஜெயபுரம் காட்டுப் பகுதியிலிருந்து மரகுற்றிகளை வாகனத்தில் ஏற்றி வந்துள்ளதாகவும் பூநகரி பொலிசார் தெரிவித்தவுடன் சம்பவம் தொடர்பாக பூநகரி நாலாம் கட்டையை சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 15 இலட்சம் பெறுமதியான 44 முதிரை குற்றிகள் மற்றும் சுத்திகரித்த நீர் போத்தல்களை வினியோகிக்கும் வாகனம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறுத்தை புலியின்...

பொறியொன்றில் சிறுத்தை புலி சிக்கியுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. பின்னர், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பொறியில் சிக்கிய சிறுத்தையை கொலை செய்து விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். சந்தேக நபரின் வீடு சோதனைக்குட்படுத்தப்பட்ட போது சிறுத்தை புலியின் இறைச்சி மற்றும் உடற்பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## விவசாய, கல்வித்துறைகளுக்கு...

பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமரர் இரத்னாயக்க தொடர்பான அனுதாபப் பிரேரணையில் உரையாற்றும் போதே சபை முதல்வர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி அனுதாப பிரேரணையில் ஆளும் கட்சி, எதிர்க் கட்சியைச் சேர்ந்த பலரும் உரையாற்றினர்.

அமைச்சர் தினேஷ் குணவர்தன மேலும் தெரிவிக்கையில்; பண்டு வஸ்நுவர பாராளுமன்ற உறுப்பினர் 23 வயதில் அரசியலுக்கு வந்தவர். வடமேல் மாகாணத்தில் விவசாயத் துறை கல்வித்துறை மற்றும் சமூக சமய செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அவர் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஆணைக்குழுவின் தலைவராக...

மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று சபையில் அறிவித்தார்.

அமைச்சர் காமினி லொக்குகேயின் பெயரை அந்த பதவிக்காக பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட முன்மொழிந்ததுடன் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் புஸ்பகுமார அதனை வழிமொழிந்தார் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

மேற்படி நியமனம் நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்ற போது மக்கள் முறைப்பாட்டு தெரிவுக் குழுவின் முதலாவது அமர்வின் போதே இடம்பெற்றது.

மேற்படி அமர்வில் இராஜங்க அமைச்சர்கள் தயாசிறி ஜயசேகர, சதாசிவம் வியாழேந்திரன், தேனுக விதானகமகே, மற்றும் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், திலிப் வெதஆராச்சி, காதர் மஸ்தான், அசோக பிரியந்த, முஜிபுர் ரகுமான், குலசிங்கம் திலீபன்,நிபுன ரணவக்க, கீதா குமாரசிங்க, ராஜிகா விக்கிரமசிங்க ஆகியோரும் பங்கேற்றனர்.

## நடைமுறை தேவைகளுக்கு முன்னுரிமை...

அவர் கல்வி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைக் கல்வி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக (24) பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

# ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருக்கு அனுதாபம்



நிந்தவூர் இரண்டாம் பிரிவைச் சேர்ந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் கிரான் கோமாரி புதுக் கண்ட விவசாய அமைப்பின் செயலாளரும் அலியார் லெப்பை கடந்த 21ஆம் தேதி காலமானார்.

அன்னாரது ஜனாஸா சொந்த ஊரில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவரது மறைவு குறித்து நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் சுலைமான் லெப்பை தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மிக நீண்ட கால உறுப்பினராக இருந்த அலியா லெப்பை சுலைமான் கட்சியின் வளர்ச்சிக்காக அரும் பாடு பட்ட ஒரு போராளி என தவிசாளர் சுலைமான் லெப்பை தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## பின்னவல யானைகள்... (03 ஆம் பக்கத் தொடர்)

அமைக்கப்பட்டு அதன் பரிந்துரைக்கு ஏற்ப அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

யானைகளை விகாரைகளில் வைப்பது பெரஹெரவில் பயன்படுத்துவது போன்றவை அரசர் காலத்து பழக்க வழக்கங்கள். எனினும் கடந்த அரசாங்கம் அரசியல் பழிவாங்கலில் சிலரை கைது செய்து அதனை பிரச்சினைக்குள்ளாக்கியது. அத்துடன் பின்னவலை யானைகள் சரணாலய நிர்வாகத்திலும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அனைத்தையும் சரி செய்து முழுமையான அபிவிருத்தி மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பயங்கரவாதத்திற்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

வருகின்றன. சார்க் அமைப்பு கடந்த 35 ஆண்டுகளில் அடைந்த முன்னேற்றத்தை பயங்கரவாதம் அழித்து விட்டது.

மேற்குறிப்பிட்ட மூன்று சவால்களை நாம் வெற்றிகரமாக எதிர்கொண்டால் தான் சார்க் நாடுகளிடம் நீடித்த அமைதி இருக்கும். பயங்கரவாதத்துக்கு எதிராக சார்க் நாடுகள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். சார்க் நாடுகளுக்கு உதவ இந்தியா எப்போதும் தயாராக உள்ளது.

பல உதவிகளையும் செய்து வருகிறது எனத் தெரிவித்துள்ளார்.

## சமுர்த்தி கொடுப்பனவிற்கு... (03ஆம் பக்கத் தொடர்)

அதிகளவான வட்டி வீதங்களிலேயே வழங்கப்படுகின்றன.

வறிய மக்களின் வாழ்வாதரம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக சமுர்த்தி வங்கிகளில் அதிக வட்டி வீதத்தில் வழங்கப்படுகின்ற கடன்களால் மக்கள் சிரமப்படுகின்றனர். ஆகவே இதனை கருத்திற்கொண்டு இவ்வட்டி வீதங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி இதனை பரிசீலனை செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் தெரியப்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 7,95,000... (03 ஆம் பக்கத் தொடர்)

நாம் நீதி அமைச்சுக்கு மட்டுமே எமது பணிகளை மட்டுப்படுத்தி செயற்படுகின்றோம். உங்களுக்கு தேவையானால் அத்தகைய விபரங்களை விண்ணப்பித்து பணம் கொடுத்து பெற்றுக் கொள்ள முடியுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்தும் மேற்படி தகவல்களை எங்கு பெறுவது போன்ற கேள்விகளை தொடர்ந்தும் எழுப்பிய சமிந்த விஜேசிறி எம்.பிக்கு பதிலளித்த அமைச்சர்,

கடந்த காலங்களில் போன்று தொலைபேசி மூலம் அழுத்தம் கொடுப்பதோ அல்லது நபர்களை தெரிவு செய்துகொண்டு நீதிமன்றத்தை அமைப்பது போன்ற நடவடிக்கைகளில் அன்றி நிதியமைச்சின் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே நீதியமைச்சர் ஆகிய நாம் மேற்கொள்ளும் பணி என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## விசாரணையிலுள்ள... (03 ஆம் பக்கத் தொடர்)

மறுபுறம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கட்சித் தலைவராக அங்கீகரிக்கப்படவில்லை என்ற காரணமும் முன்வைக்கப்பட்டது. ஆனால் கட்சித் தலைவர் என்ற காரணத்தினால் தான் அவருக்கு 27/2 இன் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

நீதிமன்ற விசாரணையில் உள்ள விடயம் என அவரது கூற்றை தடுத்தால் அது 27/2 இன் கீழ் பாதிப்பை ஏற்படுத்தாது. எனவே என்ன காரணத்திற்காக அவரது உரிமை மறுக்கப்பட்டது என்பதை சபைக்கு அறிவிக்க வேண்டும்.

## எஸ்.பி.யின் மறைவு... (03 ஆம் பக்கத் தொடர்)

பரவசப்படுத்திய அந்த இனிமையான குரல் தற்போது எம்மை விட்டு பிரிந்திருக்கின்றது.

உலகில் பிறந்த மனிதர்களில் ஒவ்வொருவரும் வெவ்வேறு நோக்கங்களைக் கொண்டு வாழ்வதுண்டு. இவ் உலகில் பிறந்த அனைவருக்கும் இறப்பு என்பது நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகும். சிலரது இறப்பினை நாம் ஒரு சம்பவமாகவே கருதுகின்றோம்.

ஆனால் சிலரது இறப்பு எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி விடுகின்றது. அந்த வகையில் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் மறைவு எம்மை ஆராத்துயரில் ஆழ்த்தியிருக்கின்றது.

அமைதியான சுபாவம் கொண்ட அவர் எல்லோரினது அன்புக்கும் பாத்திரமானவர். தமிழ், இந்தி, தெலுங்கு, மலையாளம் என இந்திய மொழிகளில் பலவற்றில் இசைவானை ஆக்கிரமித்துக் கொண்ட அந்த இசைபுயல் இன்று பிரிந்து சென்றுள்ளது. திரை இசை உள்ளங்களுக்கெல்லாம் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவ்வேளையில் அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், திரை உலகத்தினர், பன்மொழி ரசிகர்கள் அனைவரோடும் எமது ஆழ்ந்த துயரத்தை பகிர்ந்து கொள்கின்றோம் என இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாராயணசாமியின்... (03 ஆம் பக்கத் தொடர்)

அவரது இறுதி நிகழ்வில் கலந்து கொள்ள முடியாத அண்ணாருடன் இலங்கையில் தோழமை கொண்ட அனைவரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அண்ணாருக்கு நினைவாஞ்சலி செலுத்த வருமாறு அழைப்பு விடுக்கிறேன் தெரிவித்துள்ளார். இந்த கூட்டத்தில்

கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், தொழிலதிபர்கள் என பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாராயணசாமி தென்னிந்திய தூத்துக்குடி பரவள்ளிகோட்டை காயத்தாறு ஊரில் கணபதி நாயக்கருக்கு மகனாக 1930.03.09ஆம் திகதி பிறந்தார்.

மஞ்சள் குங்குமம் 1970 ஆம் ஆண்டில் இலங்கையில் வெளிவந்த ஒரு முழுநீளத் தமிழ்த் திரைப்படமாகும்.

1969ஆம் ஆண்டு முதல் கிங்ஸ்லி செல்லையா மேடையேற்றி வந்த "மஞ்சள் குங்குமம்" என்ற நாடகத்தைத் தழுவி இத்திரைப்படம் எடுக்கப்பட்டது. கொழும்பு சிலோன் ஸ்ரூடியோவில் பிரபல வர்த்தகர் ஜி. நாராயணசாமி உதவியுடன் இத்திரைப்படம் படமாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவருக்கு கொழும்பில் மாத்திரம் 24 ஹோட்டல்கள் இருந்தன. தமிழகத்தின் மதுரையிலும் ராஜே ஷ் என்ற ஹோட்டல் ஒன்றும் உள்ளது. தமிழ கத்தில் கல்யாண மண்டபமொன்று கட்டி கொடுத்துள்ளார்.

## முல்லைத்தீவில் 836... (03 ஆம் பக்கத் தொடர்)

விளைநிலங்கள் அதிகளவில் உவர் தன்மையுடன் காணப்படுவதாகவும் இதனால் தமது விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, நந்திக்கடலை அண்டிய கரையோரப் பகுதிகளில் மழைகாலங்களில் அதிக நீர் தேங்குதல் மற்றும் கடல் நீர் உட்புகுதலால் தமது வயல் நிலங்கள் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை கரையோரங்களில் காணப்படும் சேதமடைந்த உவர் நீர்த்தடுப்பணைகளை அமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் உவர் நிலங்கள் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் அவர்களை தொடர்பு கொண்டு இது தொடர்பில் கேட்டபோது, முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 836 கெக்ரேயர் நிலப்பரப்பு அதிகூடிய உவர் தன்மையான பயிர் செய்கை மேற்கொள்ளமுடியாத பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவைதவிர, கொக்கிளாய் கொக்குத்தொடுவாய் போன்ற பகுதிகளில் அதிகளவான பகுதிகள் இவ்வாறு காணப்படுவதாகவும் விவசாயத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'பாடும் நிலா' எஸ்.பி.பி...

கடந்த ஆகஸ்ட' 05ஆம் திகதி சென்னை சூளைமேட்டில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். மருத்துவமனையில் சேர்ந்தவுடன் அவர் வெளியிட்ட வீடியோவில்,

'சாதாரண காய்ச்சல் மற்றும் மூச்சுத்திணறல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளேன். ஓரிரு நாட்களில் வீடு திரும்பி விடுவேன். தயவுசெய்து யாரும் எனக்கு போன் செய்து நலம் விசாரிக்க வேண்டாம்' என்று பேசியிருந்தார்.

இந்நிலையில், கடந்த ஆகஸ்டு 13ஆம் திகதி எஸ்.பி.பியின் உடல்நிலை மோசமடைந்ததாக மருத்துவமனை அறிக்கை வெளியிட்டது. உடனே அவரது மகனும், பாடகருமான எஸ்.பி.பி.சரண், 'எனது தந்தை எஸ்.பி.பி அபாய கட்டத்தை தாண்டிவிட்டார். விரைவில் குணமடைந்து வீடு திரும்புவார்' என்று வீடியோ வெளியிட்டார். இதையடுத்து எஸ்.பி.பி கட்டை விரலை உயர்த்தி தம்ஸ்அப் காட்டும் போட்டோ சமூக வலைத்தளங்களில் வைரலானது. இதனால் அவரது ரசிகர்கள் ஆறுதல் அடைந்தனர். எஸ்.பி.பி குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்று பிரார்த்தனை செய்தனர்.

இதையடுத்து எஸ்.பி.பியின் உடல்நிலை மீண்டும் கவலைக்கிடமாக இருப்பதாகவும், மருத்துவர்கள் தொடர்ந்து சிகிச்சை அளித்து வருவதாகவும் மருத்துவமனை அறிக்கை வெளியிட்டது. இது அனைவரையும் அதிர்ச்சியடைய வைத்தது. மேலும், கடந்த ஆகஸ்டு 18ஆம் திகதி எஸ்.பி.பியின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக இருப்பதாகவும், அவருக்கு உயிர் காக்கும் உபகரணங்கள் உதவியுடன் எக்மோ கருவி பொருத்தி செயற்கை சுவாசம் அளிக்கப்படுவதாகவும் மருத்துவமனை அறிக்கை வெளியிட்டது.

இதை தொடர்ந்து திரையுலகினர் மற்றும் பொது மக்கள் சார்பில் கடந்த 20ஆம் திகதி மாலை 6 மணியளவில், எஸ்.பி.பி நலம்பெற வேண்டி கூட்டுப் பிரார்த்தனை நடந்தது.

எஸ்.பி.பி விரைவில் குணமடைந்து வீடு திரும்புவார் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக இருந்தது. இந்நிலையில் திடீரென்று நேற்று அவருடைய உடல்நிலை மோசமடைந்ததாகவும், கவலைக்கிடமாக உள்ளதாகவும் தனியார் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்தது. இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது ரசிகர்கள் மற்றும் திரையுலகினர் இடையே அதிர்ச்சியையும் மிகுந்த சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## இருதரப்பு உறவுகளை மறு ஆய்வு...

இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், "செப்டெம்பர் 26ஆம் திகதி, திட்டமிடப்பட்ட மெய்நிகர் உச்சி மாநாட்டில், பிரதமர் நரேந்திர மோடியுடன் உரையாட எதிர்பார்க்கிறேன்.

அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு, சுற்றுலா மற்றும் பரஸ்பர ஆர்வமுள்ள பிற பகுதிகளிலிருந்து எமது நாடுகளுக்கு இடையிலான பன்முக இருதரப்பு உறவை மறுபரிசீலனை செய்ய எதிர்பார்க்கிறோம்" என குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், இந்த டுவிட்டர் பதிவுக்கு பதிலளிக்கும் வகையிலேயே, பிரதமர் நரேந்திர மோடி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். பிரதமர் நரேந்திர மோடி தனது, டுவிட்டர் பதிவில் மேலும் கூறியுள்ளதாவது, "இருதரப்பு உறவுகளை விரிவாக மறு ஆய்வு செய்ய எதிர்பார்க்கின்றேன்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு பிந்தைய காலத்தில், இரு நாடுகளும் தங்கள் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழியை ஆராய வேண்டும்" என பதிவிட்டுள்ளார்.

இந்நிலையில் நாளை நடைபெறவுள்ள இந்தியாவின் முதல் மெய்நிகர் உச்சிமாநாட்டில் இரு நாட்டு தலைவர்களும் இவ்விடயம் தொடர்பான கலந்துரையாடல்களில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு ஒன்றைக் காண்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் உரையாடப்படும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் பற்றியோ அல்லது இலங்கையில் முன்னெடுக்கப்படும் அரசமைப்பு மறுசீரமைப்பு நடவடிக்கை சம்பந்தமாகவோ இதன்போது கலந்துரையாடப்படாதென இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நல்லாட்சியின் செயற்பாடுகளுக்கு...

மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

சிங்கள அரசியல்வாதிகளிடம் கேட்க வேண்டிய கேள்விகளுக்கு நான் பதிலளிக்கவோ, பொறுப்பேற்கவோ முடியாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தை இன்னமும் கரித்து கொட்டும் இனவாத முகநூலர்களின் பதிவுகளை அப்படியே காப்பியடித்து, எனது முகநூலுக்குள் உள்நுழைந்து, அவ்வப்போது மறுபதிவு செய்யும், ஒருசில "அறிவாளி" தமிழ் எழுதும் நண்பர்கள் ஒன்றை தெளிவாக புரிந்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசு என்பது ஒரு கூட்டணி அரசாங்கம். அதில் அங்கம் வகித்த தமிழ் முற்போக்கு கூட்டணிக்கும், வெளியிலிருந்து ஆதரவளித்த தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் இருந்த முன்னுரிமை தேவைகள் வேறு என்பதை அறிவாளி நண்பர்கள் முதலில் புரிந்துக்கொள்ள வேண்டும்.

எம்மை பொறுத்தவரை "மலையக தோட்டங்களில் 07 பேர்ச் காணி, சொந்த தனி வீடு, தமிழ் கிராமங்கள், வட கொழும்பில் சேரிப்புறங்களை ஒழித்து கட்டப்பட்ட 13,000 தொடர்மாடி மனைகள், அங்கே, வெளியாட்களை குடியேற்றாமல், அந்நிலத்து சேரிகளில் வாழ்ந்த தமிழ், முஸ்லிம் மக்களையே குடியேற்றியமை, மலையக புதிய பிரதேச சபைகள், மலைய அதிகார சபை" என நீண்ட சாதனை பட்டியல் உண்டு.

## நாட்டில் அரசியல் மறுமலர்ச்சிக்கு... (04ஆம் பக்கத் தொடர்)

மேலும் இவர் சிங்கள மட்டும் சட்டத்தை நாட்டுக்கு அறிமுகப்படுத்தினார். தமிழ் பேசும் மக்களின் தேவைகளையும் அபிலாஷைகளையும் யதார்த்தபூர்வமாக உணர்ந்து தமிழரசுக் கட்சி தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன் 1957 ஜுலை 26 ஆம் திகதியன்று உடன்படிக்கை செய்து கொண்டார்.

சிங்களம் மட்டும் சட்டத்தினால் ஏற்படும் விளைவுகளை தவிர்ப்பதற்காக தமிழ்மொழி விஷேட ஏற்பாடுகள் சட்டத்தையும் நிறைவேற்றினார். துறைமுகங்களையும் விமான நிலையங்களையும் பஸ் போக்குவரத்தையும் அரசு டைமையாக்கினார். தொழிலாளர்களின் நலன் கருதி ஊழியர் சேமலாப நிதியத்தை ஆரம்பித்தார். மே தினத்தை பொது விடுமுறை தினமாக்கினார். நாட்டின் நலன்களை முன்னிறுத்தி அணிசேராக் கொள்கையை முன்னெடுத்தார். அத்தோடு ரஷ்யாவுடனும் சீனாவுடனும் இராஜதந்திர உறவுகளையும் ஆரம்பித்தார். அமரர் செல்வநாயகத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையைத் தொடர்ந்து தென்பகுதியில் ஏற்பட்ட எதிர்ப்புகளுக்கும் ஆட்சேபனைகளுக்கும் இவர் துணிகரமாக முகங்கொடுத்து வந்தார். ஆனபோதிலும் அந்த உடன்படிக்கையிலிருந்து பின்வாங்க வேண்டிய நிலை அவருக்கு இறுதியில் ஏற்பட்டது. என்றாலும் அவர் மக்கள் சேவைக்கு முன்னுரிமை தொடர்ந்தும் செயற்பட்டு வந்தார்.

இவ்வாறான சூழலில் 25.09.1959 அன்று பிரதமரின் கொழும்பு 7 லுள்ள ரொஷ்மிட் பிளேஸ் இல்லத்திற்கு வந்த தல்துவே சோ மராம தேரர் எவரும் எதிர்பாராத நிலையில் பிரதமர் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தார். அதனால் படுகாயமடைந்த பண்டாரநாயக்காவுக்கு கொழும்பு வைத்தியசாலையில் ஆறு மணித்தியாலய சத்திரசிகிச்சை அளிக்கப்பட்டது. அச்சிகிச்சை பலனளிக்காத நிலையில் 1959 செப்டம்பர் 26ஆம் திகதி பண்டாரநாயக்கா உயிரிழந்தார். தல்துவே சோமராம தேரரின் ரவைகள் பண்டாரநாயக்கவை மௌனிக்கச் செய்த போதிலும் அவர் நாட்டுக்கும் மக்களுக்கும் ஆற்றிய சேவைகள் என்றும் அழியா தடம்பதித்தவையாக இடம்பிடித்து விட்டன. முன்மாதிரி மிக்க அரசியல் தலைவராக அவரை அடையாளப்படுத்தியுள்ளது.

### அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்:

# சுமுகமான ஆட்சி மாற்றத்திற்கு குடியரசு கட்சித் தலைவர் உறுதி



அமெரிக்காவில் ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னரான ஆட்சி மாற்றம் சுமுகமாக இடம்பெறும் என்று குடியரசுக் கட்சித் தலைவர் மிட்ச் மக்கோனல் உறுதி அளித்துள்ளார். ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இந்த நடைமுறை பற்றி சந்தேகம் எழுப்பி இருக்கும் நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நவம்பர் 3 ஆம் திகதி நடைபெறப்போகும் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் ஜனவரி 20 ஆம் திகதி ஒரு சுமுகமான பதவிப்பிரமாணம் இடம்பெறும் என்று மூத்த செனட் உறுப்பினரான மக்கோனல் தெரிவித்தார்.

முன்னதாக சுமுகமான ஆட்சி மாற்றம் பற்றி செய்தியாளர்களிடம் விளக்கமளிக்க மறுத்த டிரம்ப், “என்ன நடக்கும் என்று பார்ப்போம்” என்று தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் பெரும்பாலான மாநிலங்கள் தபால் வாக்கெடுப்பை ஊக்குவித்திருக்கு நிலையில் டிரம்ப் அது பற்றி சந்தேகம் எழுப்பி வருகிறார். எனினும் கொரோனா தொற்றுக்கு மத்தியில் தபால் வாக்கெடுப்பு பாதுகாப்பானது என்று அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

குடியரசு கட்சியின் டிரம்பை விடவும் அவரை எதிர்த்து போட்டியிடும் ஜனநாயகக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ஜோ பைடன் தேசிய அளவிலான கருத்துக் கணிப்புகளில் முன்னிலை பெற்றுள்ளார்.

கொரோனா தொற்றுக்கு மத்தியில் வழக்கத்தை விடவும் அதிகமானவர்கள் தமது வாக்குகளை தபால் மூலம் அளிக்கவுள்ளனர். இந்த தபால் வாக்கின் பாதுகாப்பு பற்றி டிரம்ப் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமெரிக்காவில் தோல்வி அடைந்த அனைத்து ஜனாதிபதிகளும் தமது தோல்வியை ஒப்புக் கொண்டுள்ளனர். டிரம்ப் அதனை செய்ய மறுத்தால் அமெரிக்கா முன்னர் சந்திக்காத சூழல் ஒன்றுக்கு முகம்கொடுக்கும்.

இவ்வாறு நடந்தால் இராணுத்தைக் கொண்டு டிரம்பை வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேற்றும்படி பைடன் பரிந்துரைத்துள்ளார்.

இந்நிலையில் மக்கோனல் கடந்த வியாழக்கிழமை வெளியிட்ட ட்விட்டர் பதிவில், “நவம்பர் 3 தேர்தலில் வெற்றி பெறுபவர் ஜனவரி 20இல் பதவி ஏற்பார். 1792 தொடக்கம் ஒவ்வொரு நான்கு ஆண்டுகளிலும் போன்று சுமுகமான ஆட்சி மாற்றம் ஒன்று இடம்பெறும்” என்று தெரிவித்துள்ளார்.

ஏனைய குடியரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் இதே போன்ற வாக்குறுதியை வழங்கியுள்ளனர்.

# பேஸ்புக், ட்விட்டர் மீது தாய்லாந்து வழக்கு




தாய்லாந்து அரசு பேஸ்புக், ட்விட்டர் ஆகிய சமூக ஊடக நிறுவனங்கள்மீது வழக்குத் தொடுத்துள்ளது.

இரு தளங்களிலும் பதிவேற்றப்பட்ட பதிவுகளை அகற்றும்படி நீதிமன்றம் மூலம் கோரிக்கை அனுப்பபட்டிருந்தது. அதை பேஸ்புக், ட்விட்டர் ஆகிய இரண்டும் நிறைவேற்ற தவறியதை அடுத்து தாய்லந்து மின்னிலக்கத் துறை அமைச்சு, பொலிஸ் இணையக்குற்றப் பிரிவிடம் புகார் அளித்தது.

கூகுள், யுடியுப் ஆகிய நிறுவனங்கள் தாய்லாந்தின் கோரிக்கைக்கு இணங்க குறிப்பிட்ட சில பதிவுகளை அகற்றியுள்ளன. ஊடகத் தளங்களில் பதிவேற்றப்பட்ட பதிவுகள் எத்தன்மை வாய்ந்தது என்பதையும், அதன் மூலம் எத்தகைய சட்டங்கள் மீறப்பட்டன என்பதையும் குறிப்பிட அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

பேஸ்புக், ட்விட்டர், கூகுள் ஆகிய நிறுவனங்கள் 3,000க்கும் மேற்பட்ட பதிவுகளை நீக்கும்படி தாய்லாந்து அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. அவற்றுள் சில பதிவுகள் தாய்லாந்தின் மன்னர் ஆட்சியைக் குறைகூறும் வகையில் உள்ளன.

# மார்ச் மாதத்தின் உச்சத்தை விடவும் ஐரோப்பாவில் கொரோனா தீவிரம்



ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் கொரோனா வைரஸ் பரவல் மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் மோசமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய வைரஸ் தொற்று சம்பவங்கள் மீண்டும் உயர்ந்துவருவதுடன் மரண எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. பிரான்ஸில் புதிதாக 16,000க்கும் அதிகமானோரிடம் வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

எட்டு நாட்களில் இத்துடன் நான்காவது முறையாக நாள் ஒன்றுக்குப் பதிவாகும் வைரஸ் தொற்றுச் சம்பவங்கள் புதிய உச்சத்தைத் தொட்டுள்ளன.

பிரான்ஸில் தற்போது வைரஸ் தொற்றுச் சம்பவங்களின் எண்ணிக்கை 500,000ஐத் நெருங்கியுள்ளது. உயிரிழப்பு எண்ணிக்கை 31,000க்கும் அதிகம்.

ஸ்பெயினில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 700,000ஐக் கடந்துவிட்டது. அதை அடுத்து தலைநகர் மட்ரிட்டில் பகுதிநேர முடக்கநிலையுடன் பல்வேறு பாதுகாப்பு விதிமுறைகள் நடப்புக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. அதை எதிர்த்து நூற்றுக்கணக்கானோர் கடந்த வியாழக்கிழமையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அது பொலிஸாருடனான மோதலில் முடிந்தது. தலைநகர் ஏதன்ஸில் உள்ள பொதுமக்கள் முகக்கவசம் அணிந்து பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் என்று கிரேக்கப் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

# நடப்பாண்டு முதல் நோபல் பரிசுத் தொகை அதிகரிப்பு



உலகப் பிரபலமான நோபல் பரிசை வெல்பவர்களுக்கு நடப்பாண்டு முதல் 1 இலட்சத்து 10 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் கூடுதலாக பரிசுத் தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிக மதிப்பு வாய்ந்த விருதாக நோபல் பரிசு உள்ளது. நோர்வே பாராளுமன்றத்தால் வழங்கப்படும் இந்த விருது அமைதி, இரசாயனம், பொருளாதாரம், இலக்கியம், மருத்துவம் மற்றும் பௌதீகவியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு ஆண்டுதோறும் விருது வழங்கி கௌரவித்து வருகிறது.

இந்நிலையில் இந்த ஆண்டு நோபல் பரிசுகளை வெல்பவர்கள் கூடுதலாக 1 லட்சத்து 10 ஆயிரம் அமெரிக்க டொலர்களைப் பெறுவார்கள் என்று விருதுகளை மேற்பார்வையிடும் அறக்கட்டளை கடந்த வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

நோபல் அறக்கட்டளையின் நிதிநிலைமையைப் பொறுத்து அவ்வப்போதுபரிசுத்தொகையில்மாற்றங்கள் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# ஆஸியில் 400 திமிங்கிலங்களின் உடல்களை அகற்றப் போராட்டம்




அவுஸ்திரேலிய அதிகாரிகள் சுமார் 400 திமிங்கிலங்களின் சடலங்களைக் கடலில் வீசி அகற்றும் திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கரையோரங்களில் ஒதுங்கிச் சிக்கிக் கொண்ட திமிங்கிலங்களில் உயிர் பிழைத்தவற்றைவிட இறந்தவையே அதிகம்.

காப்பாற்றப்பட்ட சுமார் 70 பைலட் வகை திமிங்கிலங்ளை மீட்புப் பணியாளர்கள் கடந்த வியாழனன்று விடுவித்தனர். விடுவிக்கப்பட்ட திமிங்கிலங்களில் அதிகமானவை ஆழ்கடலுக்கு நீந்தி உயிர் பிழைத்தன. அவற்றில் 4 திமிங்கிலங்கள் கருணைக்கொலை செய்யப்பட்டன.

எஞ்சியுள்ள 20 திமிங்கிலங்கள் ஆழமற்ற நீரில் தத்தளிக்கின்றன.

5 நாட்களுக்கு முன் அவை 470 திமிங்கிலங்கள் கொண்ட குழுவாக டஸ்மேனியா தீவைச் சுற்றி நீந்திய வண்ணம் காணப்பட்டன.

இறந்த திமிங்கிலங்களைக் கடலில் வீசும் பணி அவ்வளவு இலகுவானதல்ல.

கடலில் சடலங்களை வீசும் போது அவை அழுகிப் போய் சுற்றுப்புறத் தூய்மைக் கேட்டை உண்டாக்கலாம்.

அதனால் அவற்றை தூரத்தில் வீசிவிட வேண்டும் எனக் கடல் ஆய்வாளர் வனெஸா பிரோட்டா பரிந்துரைத்தார்.

மீட்புப் பணியிலும், இறந்த திமிங்கிலங்களை அகற்றும் பணியிலும் அரசாங்க ஆய்வாளர்கள், தொண்டூழியர்கள் உட்பட 60 பேர் ஈடுபட்டுள்ளனர்.

# ஆணுறைகளை மறுபயனீடு செய்து விற்றவர்கள் கைது



பயன்படுத்தப்பட்ட ஆணுறைகளைச் சுத்தம் செய்து புதியவை போன்று பொட்டலமிட்டு விற்ற கும்பலை வியட்நாம் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்களிடமிருந்து சுமார் 345,000 ஆணுறைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

சரக்குக் கிடங்கு ஒன்றில் பயன்படுத்தப்பட்ட ஆணுறைகளைக் கொண்ட பெரிய பைகள் சிதறிக்கிடப்பதை வியட்நாமின் வி.டி.வி தொலைக்காட்சி ஒளிபரப்பியது. அடையாளம் தெரியாத முகவரிடமிருந்து பயன்படுத்தப்பட்ட ஆணுறைகள் விநியோகம் செய்யப்பட்டதாக அந்தச் சரக்குக் கிடங்கு முதலாளி வியட்நாமிய நாளிதழ் ஒன்றிடம் தெரிவித்தார்.

பயன்படுத்தப்பட்ட ஆணுறைகளை வெந்நீரில் கொதிக்கவிட்ட பின்னர் அவற்றைக் காயவைத்து மீண்டும் பொட்டலமிட்டு விற்றதாகத் தடுத்து வைக்கப்பட்ட பெண் ஒருவர் தெரிவித்தார். 'மறுபயனீடு' செய்யப்பட்ட ஆணுறைகளில் எத்தனை ஏற்கனவே விற்பனைக்கு விடுக்கப்பட்டன என்பது தெரியவில்லை.

'மறுபயனீடு' செய்யப்பட்ட ஒவ்வொரு கிலோகிராம் ஆணுறைகளுக்கும் 0.17 டொலர் கிடைத்ததாக அந்தப் பெண் தெரிவித்தார்.



# அமெ. கொரோனா தொற்று ஏழு மில்லியனைத் தொட்டது

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியானோர் எண்ணிக்கை 7 மில்லியனைத் தாண்டியுள்ளது.

உலக அளவில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கையில் அது 20 வீதத்திற்கும் அதிகம் என்று ரோய்ட்டர்ஸ் செய்தி தெரிவித்தது. அமெரிக்காவில் நாள்தோறும் 700க்கும் அதிகமானோர் வைரஸ் தொற்றால் உயிரிழக்கின்றனர். உயிரிழப்பு எண்ணிக்கை 200,000க்கும் அதிகம். உலக நாடுகளில் வைரஸ் தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை அமெரிக்காவில்தான் மிக அதிகம்.

மத்தியமேற்கு வட்டார மாநிலங்களில் கடந்த மாதம் வைரஸ் தொற்று உறுதியானோர் எண்ணிக்கை அதற்கு முந்தைய மாதத்தை விட மிகவும் அதிகரித்தது. சௌத் டகோட்டா, நோர்த் டகோட்டா ஆகிய மாநிலங்களில் நிலைமை மோசமாக உள்ளது.

அவற்றில் புதிதாக வைரஸ் தொற்று உறுதியான பலர், சௌத் டகோட்டாவில் நடந்த வருடாந்தர மோட்டார் சைக்கிள் பேரணியுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர்.

# பலஸ்தீனத்தில் தேர்தல் நடத்த பத்தா, ஹமாஸ் உடன்படிக்கை



பலஸ்தீனத்தில் சுமார் 15 ஆண்டுகளுக்குப் பின் தேர்தலை நடத்துவதற்கு இரு பிரதான தரப்புகளான பத்தா மற்றும் ஹமாஸ் அமைப்புகள் இணங்கியுள்ளன.

பத்தாவின் பலஸ்தீன அதிகாரசபை தலைவர் மஹ்மூத் அப்பாஸ் மற்றும் ஹமாஸ் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மைல் ஹனியா இடையே ஏற்பட்டிருக்கும் உடன்பாட்டில் அடுத்த ஆறு மாதங்களில் தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்படவுள்ளது.

“முதலில் பாராளுமன்ற தேர்தலையும் தொடர்ந்து பலஸ்தீன அதிகாரசபையின் ஜனாதிபதி தேர்தலையும் இறுதியில் பலஸ்தீன விடுதலை அமைப்பின் மத்திய குழுவையும் அமைக்க நாம் இணங்கியுள்ளோம்” என்று சிரேஷ்ட பத்தா அதிகாரியான ஜிப்ரில் ரஜூப் தெரிவித்தார்.

கடைசியாக 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஹமாஸ் எதிர்பாராத பெரு வெற்றியை பெற்றது.

துருக்கியில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த உடன்படிக்கை எட்டப்பட்டதாக ஹமாஸ் மூத்த அதிகாரி சலேஹ் அல் அரூரி தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் 3 மாதத்தில் ஏழாவது மரண தண்டனை

1999 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டை கொலை தொடர்பில் ஆபிரிக்க அமெரிக்கர் ஒருவருக்கு அமெரிக்காவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் அமெரிக்க மத்திய சிறை கைதி ஒருவர் மீது மரண தண்டனை நிறைவேற்றப்படுவது இது ஏழாவது முறையாகும்.

40 வயதான கிறிஸ்டோபர் அன்ட்ரே வியால்லே கொலை இடம்பெறும்போது வயது முதிர்ச்சி அடையவில்லை என்று கடைசி நேரத்தில் உச்ச நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டதை அடுத்து கடந்த வியாழக்கிழமை அவர் மீது விச ஊசி செலுத்தி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.



டெக்சாசில் இளம் ஜோடி ஒன்றை கொன்று அவர்களின் உடல்களை தீ வைத்து கொளுத்தியதற்காக 2000ஆம் ஆண்டு வியால்லே மீது மரண தண்டனை விதிக்கப்பட்டது.

கொலை செய்யும் போது அவருக்கு 19 வயதாகும். அமெரிக்க மத்திய நிர்வாகம் பதின்ம வயது குற்றம் ஒன்றுக்காக மரண தண்டனை நிறைவேற்றுவது கடந்த 70 ஆண்டுகளில் இது முதல் முறையாகும்.

# உலகில் அதிக எடை கொண்டவர் கொரோனாவிலிருந்து மீண்டார்



‘உலகின் மிக அதிக எடை கொண்டவர்’ என்று 2017ஆம் ஆண்டு கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்த ஜுவன் பெட்ரோ பிரான்கோ, கொரோனா தொற்றிலிருந்து விடுபட்டுள்ளார். நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், இதயப் பிரச்சினைகள் போன்றவற்றின் காரணமாக கொரோனா தொற்றைச் சமாளிப்பது அவருக்கு பெரும் போராட்டமாக இருந்தது.

மெக்சிகோ நாட்டைச் சேர்ந்த அவர் பல ஆண்டுகளாக உணவுப் பழக்கத்தில் மாற்றம், உடற்பயிற்சி, வயிற்று குறைப்பு அறுவை சிகிச்சை என பல்வேறு முறைகளைக் கையாண்டு 250 கிலோவுக்கு மேல் எடை குறைத்துள்ளார். கடந்த 2017ஆம் ஆண்டு 595 கிலோ எடையுடன் இருந்த அவர், தற்போது சுமார் 208 கிலோ எடையுடன் உள்ளார்.

“மிகக் கொடிய நோய்” என கொரோனா தொற்றைக் குறிப்பிடும் பிரான்கோ, “தலைவலி, உடல்வலி, காய்ச்சல், மூச்சுத் திணறல் போன்றவற்றால் பெரும் அவதியுற்றேன்" என்றார்.

உலக அளவில் அதிகமாக கொவிட் 19 தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையில் நான்காம் இடத்தில் இருக்கும் மெக்சிகோவில் கொரோனா தொற்றி உயிரிழந்த சுமார் 74,000 பேரில் கால்வாசிப்பேர் அதிக பருமனானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலை மாணவர்களுடன் பொலிசார், இராணுவம் முரண்பாடு





**கந்தர்மடம் நிருபர்**

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் வெளியில் செல்வதை பொலிசார் இடைமறித்ததை தொடர்ந்து பல்கலைக்கழக வாசலில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இதன்போது பொலிசார் மாணவர்களை அச்சுறுத்தியதாகவும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர். நேற்று பிற்பகல் 2 மணிக்கு பல்கலைக்கழகத்திலிருந்து மாணவர்கள் சிலர் வெளியே சென்றுள்ளனர். இதன்போது அங்கிருந்த பொலிசார் மாணவர்கள் வெளியே செல்ல முடியாது என இடைமறித்துள்ளனர். இதன்போது எதற்காக செல்ல முடியாது என பொலிசாரிடம் வினவியுள்ளனர். தமது நண்பனின் பிறந்தநாள் விழாவுக்கு செல்வதற்கு பொலிசாரிடம் அனுமதி பெற்றா செல்ல வேண்டும் என மாணவர்கள் பொலிசாருடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

அதற்கு பொலிசார் அனுமதிக்காத நிலையில் அவ்விடத்து மேலும் பொலிசார் குவிக்கப்பட்டதுடன் இராணுவத்தினரும் அதிகளவில் அங்கு வரவழைக்கப்பட்டனர். மாலை 4 மணிவரை மேற்படி குழப்ப நிலை நிலவியிருந்தது.

இதனால் பல்கலைக்கழக வாசலில் குழப்ப நிலை ஏற்பட்டது. அத்துடன் தம்மை பொலிசார் ஒளிப்படம் எடுத்து அச்சுறுத்தியதாகவும், எல்.ரீ.ரீ என கூறி மிரட்டியதாகவும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இச் சம்பவம் பல்கலைக்கழக துணை வேந்தருக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

## சுற்றுலா மையத்துக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

**வவுனியா விசேட, ஓமந்தை விஷேட நிருபர்கள்**

வவுனியா குளத்தில் மண் நிரப்பி சுற்றுலா மையம் அமைக்கப்பட்டு வருவதற்கு எதிராக குடியிருப்பு கமக்காரர் அமைப்பால் வவுனியா நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா குளத்தில் நகரசபையினால் மண் நிரப்பப்பட்டு சுற்றுலா மையம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இந் நிலையில் இதனை ஆட்சேபித்து குறித்த குளத்தின் கமக்காரர் அமைப்பால் வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கடந்த 18 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது வழக்கை முதற்தோற்றத்திலேயே தள்ளுபடி செய்யுமாறு நகரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் சார்பாக முன்னிலையான வழக்கறிஞர்கள் மன்றைக் கோரினர்.

அவற்றில் ஒரு ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டது. மற்றைய ஆட்சேபனை தொடர்பில் எதிர்வரும் 25ஆம் திகதி நேற்று தெரிவிக்கப்படும் என நீதிபதியால் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில் நேற்று எடுக்கப்பட்ட குறித்த வழக்கினை தள்ளுபடிசெய்து நீதிபதி உத்தரவிட்டார்.

## வைத்தியசாலை விடுதியின் நடைபாதையில் தங்க வைக்கப்பட்டுள்ள நோயாளிகள்

**ஓமந்தை விஷேட நிருபர்**



வவுனியா வைத்தியசாலையின் விடுதியொன்றில் போதிய இடவசதிகள் இன்மையால் நோயாளர்கள் விடுதிக்கு வெளியே நடைபாதையில் படுத்துறங்கும் அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

காயங்கள் மற்றும் சிறுநீரகம் சார்ந்த சத்திரசிகிச்சை நோயாளர்களுக்கான விடுதியிலேயே இவ் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இவ் விடுதிக்குள் அண்ணளவாக 40 கட்டில்களே போடப்பட்டுள்ளன. அதனைவிட அதிகமான கட்டில்களை போடுவதற்கு அவ்விடுதியில் இடவசதி இல்லாதநிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் அதிகமான நோயாளர்கள் வருகைதரும்போது அவர்களிற்கு ஒதுக்குவதற்கு கட்டில்கள் இன்மையால், விடுதிக்கு வெளியே பிரதான கட்டடத்தின் வாயில் பகுதியில் நோயாளர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். குறித்த பகுதி பொது மக்கள் மற்றும், வைத்தியசாலை ஊழியர்கள் நடந்துசெல்லும் பகுதியாகும்.

விடுதியில் கட்டில்கள் பற்றாக்குறையால் நோயாளர்களிற்கு படுக்கைகளை ஒதுக்கிகொடுப்பதில் தாதிய உத்தியோகத்தர்களும் அசௌகரியங்களை எதிர்கொள்ளும் அதேவேளை விடுதியில் பணிபுரியும் மருத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படுவதால் அதிகமான நோயாளர்கள் அனுமதிக்கப்படும் போது கடமைபுரியும் ஊழியர்கள் சிரமமான நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

வடக்கின் முக்கிய வைத்தியசாலையாக காணப்படும் வவுனியா மருத்துவமனைக்கு முல்லைத்தீவு, மன்னார் உட்பட பல பகுதிகளை சேர்ந்த நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகை தருகின்றனர். இந்நிலையில் தீவிரமான நோயாளர்களை தங்க வைப்பதற்காக பயன்படும் குறித்த விடுதியில் போதிய வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்பது நோயாளர்களின் கோரிக்கையாகும்.

## தூக்கில் தொங்கிய நிலையில் கர்ப்பிணி பெண்ணின் சடலம் மீட்பு

**நாகர்கோவில் விஷேட நிருபர்**

கர்ப்பிணிப் பெண்ணொருவர் தற்கொலை செய்துள்ள சம்பவம் நெல்லியடி இராஜகிராமம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் இரண்டு பிள்ளைகளின் தாயாரான 29 வயதான கஜேந்திரன் துசேந்தினி என்பவரே உயிரிழந்துள்ளதாக நெல்லியடி பொலிசார் தெரிவித்தனர்.

நேற்று காலை வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்ட அவரை உறவினர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த போது அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் மரண விசாரணைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

## தமிழ் மக்களின் பாரம்பரியங்களும் அடையாளங்களும் காக்கப்பட வேண்டும்

### யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

**வவுனியா விசேட நிருபர்**

தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக எமது பாரம்பரியத்தை பறைசாற்றும் வெடுக்குநாரிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தை தினமும் சென்று வழிபடுவதன் மூலம் தமிழரின் பாரம்பரியங்களும், அடையாளங்களும் பேணி பாதுகாக்கப்படும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவான நெடுங்கேணி, ஒலுமடு பாலமோட்டை கிராமத்தில் இருந்து கிட்டத்தட்ட 3கி.மீ தொலைவில் வெடுக்குநாரி மலை அமைந்துள்ளது. சுமார் 3000ம் ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த மலையானது பல வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்டு காணப்படுகின்றது.

300 மீற்றர் உயரமான வெடுக்குநாரி மலை அடிவாரத்தின் கீழ் தமிழ்ப்பிராமிய கல்வெட்டுக்கள் மற்றும் வட்டெழுத்துக்கள் போன்றவற்றைக் காணமுடியும். மலையின் உச்சியில் ஆதிலிங்கேஸ்வரர் எனும் சிவனுடைய லிங்கம் அமைந்துள்ளது. கிட்டத்தட்ட ஐந்து தலைமுறையினருக்கு மேலாக இப் பிரதேச மக்கள் இந்த ஆலயத்தை வழிபட்டு வருகின்றனர்.

இலங்கைத் தொல்லியல் திணைக்களம் அதனைத் தமது பிரதேசமாக கைக்கொள்ளும் வகையில் இவ்வாலயத்தில் பூஜை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தடையாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

தற்போது நீதி மன்றத்தினால் வழக்கு தாக்கல் நிராகரிக்கப்பட்டு ஆலய உற்சவத்தை வழமை போன்று நடத்த அனுமதி வழங்கிய நிலையில் தமிழரின் அடையாளமும் பண்பாட்டு அம்சமும் மிக்க இவ்வாலயத்தை பாதுகாக்க வேண்டிய கடமை தமிழர்களாகிய எமக்கு உண்டு.

அந்தவகையில் வெடுக்குநாரிமலை ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் 17.09.2020 அன்று ஆரம்பமாகி நடைபெற்று வரும் நிலையில் இன்று 108 பானைகளில் பொங்கலுடனான இறுதி உற்சவம் நடைபெறவுள்ளது.

எனவே எவ்வித மத வேறுபாடுகளுமின்றி தமிழரின் பாரம்பரியத்தை காப்பதற்கு தமிழ் மக்களின் பூரண ஒத்துழைப்பு என்பது அவசியமாகின்றது.

இன்று தமிழரின் அடையாளங்கள் பல அழிக்கப்பட்டு வருகின்றன. அவற்றை பாதுகாக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும். அவற்றை பாதுகாப்பதன் ஊடாக எதிர்கால சந்ததியினருக்கு தமிழரின் பாரம்பரியங்கள், அடையாளங்களை தெரியப்படுத்துகின்ற தேவை எமக்கு உண்டு.

இன்று பலராலும் பேசப்படும் ஒரு விடயமாக வெடுக்குநாரி மலை ஆலயம் காணப்படுகின்றது. தமிழர்களின் வட, கிழக்கு எல்லையோர கிராமங்கள் திட்டமிட்டு ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றன.

அதேபோன்று இவ்வாலயமும் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டு விடும் என்ற பயம் எம்மவர் மத்தியில் காணப்படுகின்றது.

இந் நிலையில் இவ்வாலயத்திற்கு மக்கள் சென்று வரும் பட்சத்தில் இவ்வாலயம் தொடர்பாக மேலதிக விழிப்புணர்வு தமிழ் மக்கள் மத்தியில் கிடைக்கப்பெறும்.

எனவே தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக எமது பாரம்பரியத்தை பறைசாற்றும் வெடுக்குநாரி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தை தினமும் சென்று வழிபடுவதன் மூலம் தமிழரின் பாரம்பரியங்களும், அடையாளங்களும் காக்கப்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எனவே யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியமும் இவ்வாலய பொங்கல் நிகழ்விற்கு பூரண ஆதரவை வழங்குவதோடு அன்பான தமிழ் பேசும் உறவுகள் அனைவரையும் எமது கலாசாரத்தை பறைசாற்றும் வகையில் இப் பொங்கல் நிகழ்விலே கலந்துகொள்ளமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

## தேர்தல் பிரசார விழிப்புணர்வு



**தலைமன்னார், மன்னார் குறூப் நிருபர்கள்**

தேர்தல் பிரசார நிதி மற்றும் தேர்தல் செயல் முறை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயல் திட்டம் நேற்று காலை 10.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. பவ்ரல் அமைப்பும், மன்னார் மாவட்ட தேர்தல் திணைக்களமும் இணைந்து குறித்த விழிப்புணர்வு செயல்திட்ட நிகழ்வினை ஏற்பாடு செய்தன. குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ஜே.ஜெனிற்றன், மற்றும் பவ்ரல் அமைப்பின் நிகழ்ச்சி திட்ட அதிகாரி மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது தேர்தல் காலங்களில் தேர்தல் நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்படுகின்ற நிதி தொடர்பாகவும், தேர்தல் தொடர்பாகவும் விழிப்புணர்வு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கடும் காற்றினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி

**புதுக்குடியிருப்பு நிருபர்**

முல்லைத்தீவில் கடந்த வாரம் வீசிய கடும் காற்றினால் பாதிக்கப்பட்ட 14 குடும்பங்களுக்கான முதற்கட்ட உதவித் தொகை வழங்கப்பட்டது. மாவட்ட தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தால் இந்த இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. புதுக்குடியிருப்பு, ஒட்டிசுட்டான், வெலிஓயா, துணுக்காய், கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் பகுதியளவில் பாதிக்கப்பட்ட 14 வீடுகளுக்கான காசோலைகளை குறித்த பிரதேச செயலகங்களில் வைத்து பதவி நிலை உத்தியோகத்தர்களால் வீட்டு உரிமையாளர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

## கிளிநொச்சி கிருஷ்ணர் ஆலயத்திற்கு புதிய நிர்வாகிகள்

**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சி கிருஷ்ணர் ஆலயத்தின் நிர்வாகம் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளமையால் அடுத்த இரு வாரங்களில் இவ்வாலயத்திற்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படவுள்ளதாக கரைச்சிப் பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி திருநகர் கிருஷ்ணர் ஆலய நிர்வாகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். அதாவது ஆலயத்தின் பல்வேறு கட்டுமானப்பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதுடன் ஆலயத்திற்கான புதிய தேர் அமைக்கும் பணியும் விரைவாக முன்னெடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10ஆம் திகதி இவ்வாலயத்தின் புதிய நிர்வாகம் தெரிவு கரைச்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் என பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டபோதும் அன்றைய தினம் அதற்கான கூட்டம் நடைபெறவில்லை.

இது தொடர்பில் கரைச்சிப்பிரதேச செயலாளரை வினவிய போது, ஆயலத்தின் நிர்வாகம் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அத்துடன், தற்போதுள்ள நிர்வாகம் இரண்டு பிரிவுகளாக செயற்படுகின்றன.

ஏற்கனவே பொதுக்கூட்டத்தை நடத்துவதற்கு திகதி அறிவிக்கப்பட்ட தினத்தில் மாவட்டத்தில் முக்கிய கூட்டம் ஒன்று நடைபெற்றதால் அதனை நடத்தமுடியாது போய்விட்டது. எதிர்வரும் இருவாரங்களில் இதற்கான கூட்டம் நடத்தப்பட்டு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படும் என்றார்.



யாழ்ப்பாணம் கே.கே.பி இளைஞர் கழகத்தினரின் ஏற்பாட்டில் யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 17 வறிய மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டன. படம் சாவகச்சேரி விசேட நிருபர்

## ஜீவநகர் கிராமத்தில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த நிதி இல்லை

**மாங்குளம் குறூப் நிருபர்**



முல்லைத்தீவு ஜீவநகர் கிராம மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் மாவட்ட செயலகம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட செயலக அரசாங்க அதிபர் க.விமலநாதன் தெரிவித்தார்.

நேற்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

ஒட்டுசுட்டான் ஜீவநகர் என்கின்ற கிராமத்தில் 20 குடும்பங்களின் வீடுகள் பூரணப்படுத்தப்படாத நிலையிலும் அங்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையிலும், பாதைகள் புனரமைக்கப்படாத நிலையிலும் மிகவும் கஷ்டப்பட்ட நிலையில் வறுமைப்பட்ட மக்கள் வாழ்வதாக முறைப்பாடு கிடைத்தது.

அதனடிப்படையில் நான் நேரடியாக கடந்த புதன்கிழமை கள விஜயம் செய்து அங்குள்ள நிலமைகளை ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஒட்டுசுட்டான் கிராம அலுவலர் முத்தையன்கட்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோருடன் சென்று பார்வையிட்டேன்.

அந்த நிலைமை பரிதாபமான நிலையாக இருந்ததன் காரணமாக நாங்கள் எமது மாவட்ட செயலகத்தால் வருகின்ற நிதிகளில் இருந்து இவ்வாண்டு அல்லது அடுத்த ஆண்டு அதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வோம்.

பொதுக்கிணறு, மலசலகூட வசதிகள், பாதைகளை புனரமைப்பு செய்வதற்கும், மின்சார இணைப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்குமான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். அதற்கான நிதி கிடைத்ததும் அவை ஆரம்பிக்கப்படும் என்றார்.

# மலையகத்தில் தொடரும் குளவி கொட்டு சம்பவங்கள்; குடும்பஸ்தர் உயிரிழப்பு

**பதுளை தினகரன் விசேட நிருபர்**



குளவிக்கொட்டினால் பாதிக்கப்பட்டு பதுளை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தோட்டத்தொழிலாளியொருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

ஹப்புத்தளைப் பகுதியின் தம்பேதன்னை பெருந்தோட்டத்தைச் சேர்ந்த 46 வயது நிரம்பிய இரண்டு பிள்ளைகளின் தந்தையான பொன்னையா ராஜ்குமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் ஹப்புத்தளை, தம்பேதன்னை தோட்டத்தில் கடமையிலிருந்த வேளையில் குளவிக் கொட்டினால் பதுளை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதனையடுத்து இவருக்கு ஹப்புத்தளை மருத்துவமனையில் ஆரம்ப சிகிச்சைகள் வழங்கப்பட்டன. எனினும் அவருக்கு வருத்தம் கடுமையானதினால் அங்கிருந்து அவர் பதுளை அரசினர் மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக மாற்றப்பட்டார். இந்நிலையிலேயே அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் பயனளிக்காமல் நேற்று மதியம் உயிரிழந்தார். கூடுதலான குளவிகள் கொட்டியதினாலேயே இம் மரணம் இடம்பெற்றுள்ளதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர். ஹப்புத்தளைப் பொலிஸார் இச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



மாத்தளை புகையிரத வீதியில் இடம் பெற்றுவரும் வடிகால் அமைப்பின் புனரமைப்புபணிகள் இதுவரை நிறைவுசெய்யப்படாமல் இருப்பதால் போக்குவரத்து வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். புனரமைப்புபணிகள் இடம்பெறுவதை படத்தில் காணலாம்.

படம் உக்குவளை விசேட நிருபர்

சர்வதேச தகவல் அறியும்

# தினத்தை முன்னிட்டு விசேட ஊடக கலந்துரையாடல்

**நாவலப்பிட்டிய சுழற்சி நிருபர்**

உரிமைகளுக்கான ஊடகவியலாளர்கள் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பு 07 விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள சௌசிறிபாய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

திங்கட்கிழமை காலை 9.30 மணி முதல் பகல் 12 30 மணிவரை இந் நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல பிரதமஅதிதியாக கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

விஷேட அதிதிகளாக முன்னாள் சபாநாயகர் கருஜயசூரிய தகவல் அறியும் உரிமைச்சட்ட ஆணைக்குழுவின் ஆணையாளர் சட்டத்தரணி கிர்சாலிபின்டோ ஜயவர்தன அரச தகவல் திணைக்கள பணிப்பாளர் சட்டத்தரணி நாலக்க கலுவெவ ஊடக அமைச்சின் மேலதிகசெயளாலர் எ.ச்.ஹேவாகே மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட மூவினங்களையும் சேர்ந்த ஊடகவியளாலர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அகில இலங்கை ரீதியில் 25 மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம், சிங்கள ஊடகவியலாளர்கள் இணைந்தே "உரிமைகளுக்கான ஊடகவியலாளர்கள்" என்ற அமைப்பினை அண்மையில் அங்குரார்பணம் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கினிகத்தேன – கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்து வழமைக்கு திரும்பியது

**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

கினிகத்தேன – கொழும்பு பிரதான வீதியில் ரம்பதெனிய பகுதியில் சரிந்துவிழுந்த பாரிய கற்பாறை அகற்றப்பட்டுள்ளது. இதனையடுத்து நேற்றுமுன்தினம் மாலை முதல் அவ்வீதி ஊடான போக்குவரத்து வழமைக்கு திரும்பியது.

கினிகத்தேன – கொழும்பு பிரதான வீதியில் ரம்பதெனிய பகுதியில் நேற்றுமுன்தினம் காலை 7 மணியளவில் பாரிய கற்பாறையொன்று சரிந்து விழுந்ததால் அவ்வீதி ஊடான போக்குவரத்து முற்றாக முடங்கியது.

இதனால் கற்பாறையை அகற்றி இயல்புநிலை திரும்பும் வரை ஹற்றனிலிருந்து கொழும்பு செல்லும் அதேபோல கொழும்பில் இருந்து ஹற்றன் வரும் பயணிகள் மாற்று வழியை பயன்படுத்தினர்.



இந்நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும், இராணுவத்தினரும் காலை முதல் கற்பாறையை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். மாலை 5.15 மணியளவில் கற்பாறையும், மண்ணும் அகற்றப்பட்டது.

எனினும், சீரற்றகாலநிலை தொடர்ந்தால் மண்சரிவு ஏற்படும் அபாயமிருப்பதால் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு சாரதிகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## ஓடும் பஸ்ஸில் இருந்து இறங்க முற்பட்ட பெண் படுகாயம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

மிரிஸ்வத்தைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் வீதியில் ஓடிக்கொண்டிருந்த பஸ்வண்டியில் இருந்து இறங்க முற்பட்ட 47 வயதுடைய பெண்னொருவர் படுகாயமடைந்த நிலையில் பலாங்கொடை அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பலாங்கொடை நகரிலிருந்து பனான இலுக்கும்புற நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் வண்டி வேகமாகச் சென்று கொண்டிருக்கையில் பஸ் வண்டியிலிருந்து இறங்குவதற்காக மணியை அடிக்காமல் சாரதி நடத்துனர்களுக்கு அறிவிக்காமல் ஓடும் பஸ்சிலிருந்து இவர் இறங்க முற்பட்டுள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில் வேகமாக வீசப்பட்ட அவர் வீதியோரத்தில் விழுந்ததனால் படுகாயமடைந்துள்ளார்.

இவரை உடனடியாக செயற்பட்ட பஸ் ஊழியர்கள் மற்றும் ஏனைய பயணிகள் பலாங்கொடை அரச வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

# உடரதல்ல தோட்டத் தொழிலாளர் பிரச்சினைக்கு சட்ட உதவிகளை வழங்க தயார்

– அனுஷா உறுதி



உடரதல்ல தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க சட்ட ரீதியான சகல விடயங்களையும் செய்துதர தான் தயார் என சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

உடரதல்ல தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக கடந்த 10 நாட்களுக்கு மேல் போராடி நேற்று உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுவரும் தோட்டத் தொழிலாளர்களை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

உடரதல்ல போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் குறிப்பிட்ட ஒரு தொழிற்சங்கத்தை சேர்ந்தவர்கள் என்பதனால் மலையகத்திற்கு தலைமை கொடுப்பதாக கூறிக் கொள்ளும் ஏனைய தொழிற்சங்க தலைமைகள் இவ்விடயத்தில் தலையிடாமல் இருக்கின்றன.

நிர்வாகத்தின் நெருக்கடியான முடிவுகளால் தொழிலாளர்கள் மாற்று வழி இன்றி தாங்களே தங்களின் பிரச்சினைகளின் தீர்வுக்காக உண்ணாவிரதத்தில் குதித்துள்ளார்கள்.

இந்த நிலைமையை தொடர விடுவது தொழிலாளர்களுக்கு மேலும் மேலும் நெருக்கடிகளையே கூட்டும்.

ஆகவே இவ்விடயத்தில் கட்சி பேதங்களை மறந்து தேர்தல் காலத்தில் மேடையில் கூறியதுபோல் சகல மக்களின் பிரச்சினைகளையும் நேர்மையாக கையாண்டு இந்த தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுதர மலையக தொழிற்சங்கங்கள் முன்வரவேண்டும்.

நிர்வாகங்களின் முறையற்ற போக்குகளுக்கும் மக்களின் பிரச்சினைகளில் தொழிற்சங்கங்கள் வேதம் காட்டும் செயலுக்கும் நிரந்தர முடிவு எட்டப்பட வேண்டும்.

தேர்தல் காலங்களில் மாத்திரம் மக்கள் நலனில் அக்கறை காட்டி செயற்படுவது போல தேர்தல் முடிந்த பின்னரும் நாம் அவர்களின் பிரச்சினைகளில் இணைந்திருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கருத்து தெரிவித்துள்ளார்.

# கொவிட் 19 தொற்றை ஒழிப்பதற்கு சேவையாற்றிய அரச சேவையாளர்கள் கௌரவிப்பு

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

கொரோனா தொற்றை ஒழிப்பதற்கு மிகவும் பொறுப்புடன் சேவையாற்றியவரும் கேகாலை மாவட்டத்தை சேர்ந்த அரச சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்றை ஒழிப்பதற்கு மிகவும் பொறுப்புடன் சேவையாற்றிவரும் கேகாலை மாவட்டத்தை சேர்ந்த அரச சேவையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை (23) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் கேகாலை வாடி வீடு கட்டடத்தொகுதியில் இடம் பெற்றது.



சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் கொரோனா தொற்றை ஒழிப்பதற்காக இரண்டு மாவட்டங்களிலும் மாகாண ஆளுநர் தலைமையிலான மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், பாதுகாப்பு தரப்பினர்கள், சுகாதார அதிகாரிகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், கல்வி காரியாலயங்கள், கூட்டுறவுத் துறைகள் உட்பட மாவட்டத்தில் உள்ள சகல அரச நிறுவனங்களையும் இணைத்து செயலணி அமைக்கப்பட்டு அதன் ஊடாக மக்களுக்கு பாரிய சேவைகளை செய்து வருகின்றது.

இதேவேளை கொரோனா தொற்றை ஒழிப்பதற்கு கடந்த காலங்களில் மிகவும் பொறுப்புடன் சேவையாற்றிய இரத்தினபுரி மாவட்டத்தை சேர்ந்த அரச சேவையாளர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, கேகாலை மாவட்ட செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய உட்பட அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.







பிரதமரின் பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமானினால் பட்டாவத்தை தோட்ட மேற் பிரிவின் கோயில் கட்டுமானப் பணிக்கு நிதியுதவி வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

160 பேரின் ஆதரவுடன்

# 20 ஆவது அரசியலமைப்பு சட்ட மூலம் நிறைவேற்றப்படும்

**(இரத்திபுரி சுழற்சி நிருபர்)**



பாராளுமன்ற உறுப்பினர்கள் 160 பேரின் ஆதரவுடன் 20 ஆவது அரசியலமைப்பு சட்ட மூலம் நிறைவேற்றப்படும் என ஏற்றுமதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புற தெரிவித்தார்.


எம்பிலிபிட்டியவில் நேற்று நடைபெற்ற பல வரவேற்பு நிகழ்வுகளின் பின் செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், அரசியலமைப்பின் 20ஆவது திருத்த சட்டமூலத்தை நாம் நிறைவேற்றியே தீருவோம்.

அதற்குப் போதுமான 2/3 ஆதரவு எமக்கு பாராளுமன்றத்தில் இருக்கிறது. இவ்விடயத்தில் நாம் உறுதியாக உள்ளோம். எனவே எமது பெரும்பான்மை விடயத்தில் யாரும் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

எனவே இம்முறை வரவு செலவு திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் நாம் 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றி காட்டுவோம்.

19ஆவது திருத்த சட்ட மூலத்தின் மூலம் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே கடந்த காலங்களில் எமது நாடு சந்தித்த பாரதூரமான பிரச்சினைகள் அனைத்திற்கும் ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட்டமையே பிரதான காரணமாகவுள்ளது.

19ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் நல்ல விடயங்களும் இருக்கின்றன. ஆனால் அதிலுள்ள நாட்டுக்கு பொருத்தமற்ற விடயங்களை நீக்குவோம் எனவும் தெரிவித்தார்.



# ஓய்ந்தது காந்தர்வ குரல்!

## இசை ரசிகர்களை துயரத்தில் ஆழ்த்தி விடைபெற்றார் எஸ்.பி

## கர்நாடக சங்கீதம் கற்காமலேயே சக்கரவர்த்தியாக ஜொலித்த பாலு

பிரபல பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்ரமணியம் கொரோனாவுக்கு சிசிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று பிற்பகல் 1 மணியளவில் காலமானார்.

கொரோனா தொற்று காரணமாக சென்னை எம்.ஜி.எம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், கொரோனாவில் இருந்து குணமடைந்தாலும், தொடர்ந்து உயிர் காக்கும் கருவிகளுடன் தீவிர சிகிச்சையில் இருந்து வந்தார். அவரது மறைவு ஒட்டுமொத்த இசை ரசிகர்களையும், பிரபலங்களையும் துயரக் கடலில் ஆழ்த்தி உள்ளது. 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை பாடியுள்ள எஸ்.பி. பாலசுப்ரமணியம் வெறும் பின்னணி பாடகராக மட்டுமின்றி பல படங்களில் நல்ல நடிகராகவும் நடித்துள்ளார்.

16 மொழிகளில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களை பாடி கின்னஸ் சாதனை படைத்துள்ள 'பாடு நிலா பாலு', தென்னிந்திய மொழிகளான தமிழ், தெலுங்கு மற்றும் கன்னட மொழிகளில் சுமார் 75 படங்களில் நடித்துள்ளார்.

'மனதில் உறுதி வேண்டும்' படத்தைத் தொடர்ந்து மீண்டும் ராதிகாவுடன் இணைந்து எஸ்.பி. பாலசுப்ரமணியம் இணைந்து நடித்த 'கேளடி கண்மணி' படத்தை தமிழ் சினிமா ரசிகர்கள் ஒரு போதும் மறக்க மாட்டார்கள். இயக்குநர் வசந்த் இயக்குநராக அறிமுகமான அந்த படத்தில் இடம்பெற்ற "மண்ணில் இந்த காதல்" பாடலும் மூச்சு விடாமல் பாடும் பாலாவையும் என்றுமே ரசிகர்கள் மறக்க மாட்டார்கள்.

50 நாட்களுக்கும் மேலாக சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று பகல் 1.04 மணிக்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் குரலுக்கு மயங்காத மனிதர்களே கிடையாது என சொல்லலாம்.

அந்தளவுக்கு அற்புதமான குரல் வளத்தை கொண்டவர். ஸ்ரீபதி பண்டிதாரத்யுல பாலசுப்ரமணியமான இவர் சுருக்கமாக எஸ்.பி. பாலசுப்ரிமணியம் என்றும், எஸ்.பி.பி, என்றும் பாலு என்றும் அழைக்கப்படுகிறார். இவர் 1946 ஆம் ஆண்டு ஜூன் 4 ஆம் திகதி எஸ் பி சம்பமூர்த்தி மற்றும் சகுந்தலம்மா தம்பதியருக்கு மகனாக பிறந்தார்.

சிறுவயதிலேயே இசை ஆர்வம் அதிகம் கொண்டவர் எஸ்.பி. பாலசுப்ரமணியம். காரணம் அவரின் தந்தை ஒரு ஹரிகதா கலைஞர் என்பதால் அப்போதே இசைக்கருவிகளை வாசிக்க கற்றுக்கொண்டார் எஸ்.பி. பாலசுப்ரமணியம்.

மகனை எப்படியாவது பொறியியாளர் ஆக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அனந்த்பூர் ஜே.என்.டி.யு பொறியியல் கல்லூரியில் சேர்த்து விட்டார் அவரது அப்பா. ஆனால் நெருப்புக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பாலசுப்பிரமணியம் பொறியியல் படிப்பை பாதியில் நிறுத்தி விட்டு சென்னையில் உள்ள ஒரு கல்லூரியில் சேர்ந்து படித்தார்.

இசையில் பேரார்வம் கொண்ட எஸ்.பி.பி பாடகராக வேண்டும் என்ற ஆசையில் இருந்தார். ஆனால் அப்பாவுக்கோ மகனை என்ஜினியராக பார்க்க வேண்டும் என்ற ஆசை. கல்லூரி நாட்களிலேயே பல பாட்டுப் போட்டிகளிலும் இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்று வந்தார் எஸ்பிபி.

ஆரம்பத்தில் மெல்லிசைக் குழு ஒன்றை நடத்தி வந்த எஸ்.பி.பி அப்போதே பல இசையமைப்பாளர்களிடம் வாய்ப்பு கேட்டு வந்தார். பாலசுப்ரமணியம் முதல் பாடலாக தெலுங்கு திரைப்படமான 'ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மரியாத ரமணா' படத்தில் பாடினார். தமிழில் எம்.எஸ்.விதான் எஸ்பிபியை அறிமுகப் படுத்தினார்.

'சாந்தி நிலையம்' படத்தில் 'இயற்கை எனும் இளைய கன்னி' என்ற பாடலை பாடி தமிழ் சினிமாவுக்கு அறிமுகமனார். அன்று முதல் இன்று வரை தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி உட்பட 16க்கும் மேற்பட்ட மொழிகளில் சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை பாடியுள்ளார்.

6 முறை சிறந்த பின்னணி பாடகருக்கான தேசிய விருதை பெற்றுள்ளார். அதோடு ஏராளமான பிலிம்ஃபேர் விருதுகளையும் பல்வேறு மாநில அரசுகளின் விருதுகளையும் பெற்றுள்ளார்.

பல வெளிநாட்டு விருதுகளையும் குவித்துள்ளார் அதுமட்டுமின்றி நாட்டின் மிக உயரிய விருதுகளான மத்திய அரசின் பத்மஸ்ரீ, பத்மபூஷன் ஆகிய விருதுகளையும் பெற்றுள்ளார்.

எஸ்.பி. பாலசுப்ரமணியம் சிறந்த பின்னணி பாடகராக மட்டுமின்றி சிறந்த டப்பிங் கலைஞரும் ஆவார். பல படங்களுக்கு இசையும் அமைத்துள்ளார்.

எஸ்.பி. பாலசுப்பிரமணியம் கடந்த ஓகஸ்ட் 5ஆம் திகதி கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டார். தான் விரைவில் மீண்டு வருவேன் என வீடியோ வெளியிட்டார். ஆனால் சில நாட்களிலேயே அவரது உடல் நிலையில் பின்னடைவு ஏற்பட்டதால் திரைத்துறையினர் மற்றும் ரசிகர்கள் பெரும் அதிர்ச்சி அடைந்தனர்.

அவர் விரைவில் குணமடைய வேண்டி தமிழகம் முழுவதும் பலரும் கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். இதனை தொடர்ந்து எஸ்.பி.பியின் உடல்நிலையில் படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டது. எஸ்.பி.பி பாலசுப்ரமணியம் விரைவில் வீட்டிற்கு வர ஆர்வமாக இருப்பதாக அவரது மகன் எஸ்.பி சரண் தெரிவித்திருந்தார்.



இந்நிலையில் நேற்றுமுன்தினம் எஸ்.பி.பியின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை அறிக்கை வெளியிட்டது. இதனால் ரசிகர்கள் மீண்டும் அதிர்ச்சியில் ஆழ்ந்தனர். இந்நிலையில் நேற்று பகல் அவரது உயிர் பிரிந்தது.

எஸ்.பி.பி ஒரு பாடலை பாடுகிறார் என்றால், இடை இடையே அவர் சேர்க்கும் சில விஷயங்கள், குறிப்பாக சிரிப்பு, குரல் மாற்றம் உள்ளிட்ட விஷயங்கள் அவர் பாடலை கேட்க தூண்டும்.

சங்கீத உலகின் சக்கரவர்த்தியான எஸ்.பி.பி தெலுங்கு சினிமாவில் முதல் பாடலை பாடியதும், நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற எஸ்.பி.பிக்கு இரண்டாம் பரிசு அளிக்கப்பட்டதும் அதற்கு பிரபல பாடகியான எஸ். ஜானகி எதிர்ப்பு தெரிவித்து முதல் பரிசு கொடுத்த தகவலையும் கூறியிருக்கிறார்.

கர்நாடக சங்கீதம் கற்றுக் கொள்ளாமலேயே 'சங்கராபரணம்' படத்தில் இவர் பாடிய பாடல்கள் அச்சு பிசகாமல் இருந்ததுடன் அதற்காக விருதுகளையும் பெற்றுள்ளார். தமிழ் சினிமாவில் உச்ச நட்சத்திரங்களுடன் நல்ல நட்பை பாராட்டி வரும் எஸ்பிபி தெலுங்கில் பல பாடல்களை எழுதியுள்ளார்.

இதேவேளை பாடகர் பாலசுப்பிரமணியத்திற்கு கொரோனா இல்லை என்றும் அவர் மாரடைப்பால் காலமானதாகவும் மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுள்ளது. ஆரம்பத்தில் கொரோனா தொற்று தீவிரமடைந்ததால் அவருக்கு செயற்கை சுவாசமும் எக்மோ கருவியும் பொருத்தப்பட்டு தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார்.

கொரோனாவில் இருந்து அவர் மீண்ட போதிலும் நுரையீரல் பாதிப்பு, மாரடைப்பு காரணமாகவே அவர் உயிரிழந்தார்.

அவருக்கு செப்டம்பர் 5ஆம் திகதி நடத்தப்பட்ட கொரோனா சோதனையில் கொரோனா நெகட்டிவ் என வந்துவிட்டது. எனினும் நுரையீரலில் அதீத தொற்று காரணமாக செயற்கை சுவாசத்துடன் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்து மரணமானார்.

## நானும் விதிவிலக்கல்ல!



சூரியனும் சந்திரனும்
தத்தம் ஒழுக்குகளில்
தப்பாது தவறாது
அன்றாடம் அப்படியே!!

கிழக்கு வெளுப்பதும்
மேற்கு சிவப்பதும்
மாறாது மறவாது
கண்களுக்கும் மனதுக்கும்!!

எல்லாம் அப்படியப்படியே
நேரகாலம் தானேனோ
எதனையோ தேடியபடியே
நாடி ஓடிவிடுகிறது!!

விடும் மூச்சுக்களையும்
எண்ண முடியவில்லை!!
படும் அல்லல்களையும்
எழுதிவைக்க முடியவில்லை!!

நேற்றுப் போல்
இன்று என்றுமில்லை!
இன்று போல்
என்றும் நாளையுமில்லை!

எல்லோரும் அலுவல்களுடன்
போராடும் பரிதாபம்!
எத்தனை போராட்டங்கள் இதற்கு
நானும் விதிவிலக்கல்லவே!

**எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா**
பஸ்யால

## புதுப்புனல்

- ஷம்ஸ் பாஹிம்

## அம்மா

உன்னோடு வாழ்ந்த நாட்கள்
உயிரை உணர்ந்த நாட்கள்
நினைத்து நினைத்து பார்கிறேன்
என் நிழல்கூட உன்னைத்தானே
நினைவூட்டுகின்றன


என் மூச்சுகாற்றுக்கூட
முட்டி முட்டி மோதுகின்றன
உன்னினைவால்
அடுக்களையில் நீதான்
மழலை அரவணப்பில் நீதான்
கிறுக்கும் பேனாவில் நீதான்
திரும்பும் திசையெல்லாம் நீ

என் செய்வேன்
உனருகிருந்து உனக்குணவூட்ட
நானில்லை உன்னருகில்...
தவிக்கத்தான் முடிகிறது
இத்தூரதில் நானிருந்து!

**யோகராணி கணேசன்**



## தொல்லையேயில்லை



ஆசைகளுக்கு
அழிவுமில்லை
அதை அடைவதற்கு
வழியுமில்லை

அதனால் தான்
வாழ்க்கையில்
அதிக தொல்லை
இல்லை இல்லை
சொல்லே
என் இதயத்தின்
எல்லை.
நிம்மதிக்கும்
தேவைப்படுகிறது
வில்லை
நாம்
வணங்குவதெல்லாம்
பணக்கல்லை.

அதை
நிறைவாய்
அடைந்தவர்கள்
எவருமில்லை
எனவே,
கேட்போம்
இறை சொல்லை
என்றும் எமக்கு
தொல்லையேயில்லை

**நிந்தவூர் மக்கீன் ஹாஜி**

## பாவத்தின் விலை



பாவத்தின் விலை கேட்டேன்
இலவசமாம்
பரிகாசம் செய்தான்
பாவத்திற்கு எல்லாம்
பரிகாரம் கேட்டேன்
திணறிப் போய் நின்றான்
திருந்தப் போகிறாயா என்றான்
ஆம் என்றேன்
திரும்பிப் பார் என்றான்
பார்த்தேன்
கண்ணுக்கெட்டிய தூரம் வரை
கால்கடுக்க நிற்கிறது கூட்டம்
என்ன கூட்டம்
உன்போல திருந்த நினைத்த கூட்டம்
திரும்பி வந்திருக்கிறது இலவசத்திற்காக
கூட்டத்தில் இருந்த ஒருத்தனைக்
கூப்பிட்டேன்
ஏன் திரும்பி வந்தாய்
எனக் கேட்டேன்
நாகரிகப் பெருவெளியில் எங்களால்
நடிக்கத் தெரியவில்லை
அவர்கள் செய்யும் பாவங்களைவிட
அவ்வளவு பெரிதல்ல
நாங்கள் செய்வது
சரி போ
பார்த்தாயா பாவத்தின்
விளைநிலத்தில் பயிர்கள் விதைக்கப்படுவதை
முடிவாக என்ன சொல்கிறாய்
என் முடிவில் மாற்றமில்லை
என்று சொல்கிறேன்
முயற்சிக்கு வாழ்த்துகள்
எனது முகவரி இதோ
குறித்துக்கொள் உனது
குறிக்கோள் தோற்று விட்டால்
தேவைப்படும்
மறுபடி வருவேனென்று அவ்வளவு
மன உறுதியா!
என்ன சிரிப்பு
எதற்காக இந்த ஏளனச் சிரிப்பு
இறைவனைக் கூட இங்கே
இயல்பாக
இருக்க விடமாட்டார்கள்.
சென்று வா..

**பெரியமடு நிஹ்ரி**

அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்
(கிராமிய வீடமைப்பு, நிர்மாண, கட்டிடப் பொருட்கள் மற்றும் கைத்தொழில் அமைச்சு)

# இரத்மலானையில் அமைந்துள்ள கூட்டுத்தாபன தலைமையகத்தின் உணவகத்தை நடத்திச் செல்வதற்கான கேள்வி கோரல்

மேற்படி உணவகத்தை ஒரு வருட காலத்திற்கு நடத்திச் செல்வதற்காக கூட்டுத்தாபன பெறுகைக் குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

அலுவலக நேரங்களில் காசுப் பொறுப்பாளரிடம் ரூ.500.00+VAT தொகையைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கூட்டுத்தாபனத்தின் வழங்கல் பிரிவு தலைமையிடம் சமர்ப்பித்து குறித்த கேள்விப்படிவங்களை 2020.10.07 நண்பகல் 12.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் உள்ளடக்கி அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உணவகத்தை நடத்திச் செல்லும் ஒப்பந்தத்திற்கான கேள்வி" என்று குறிப்பிட்டு, 2020.10.08 பி.ப.2.00 இற்கு முன் பதிவுத்தபாலில் தலைவர், கூட்டுத்தாபன கொள்வனவு கமிட்டி அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம், இல.07, பொருபன வீதி, ரத்மலானை என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில் வழங்கல்கள் பிரிவு தலைமையின் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

இது பற்றிய மேலதிக விபரங்களை வழங்கல்கள் பிரிவு தலைவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**தொலைபேசி இலக்கம் - 2607560/2607566**
**பெக்ஸ் இலக்கம் - 2638013**

**தலைவர்**
**கூட்டுத்தாபன கொள்வனவு கமிட்டி**
**அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்,**
**இல - 7, பொருபன வீதி,**
**இரத்மலானை.**

**'உட்கட்டமைப்பு வசதிகள் துறையின் முன்னோடிகள்'**

சலுசல
SALU SALA
Lanka Salusala Limited
லங்கா சலுசல லிமிட்டெட்

# சலுசலவுடன் ஆடை உற்பத்திக்கான அழைப்பு

இலங்கை சலுசல நிறுவனத்தினால் 2020 செப்டெம்பர் 19ஆம் திகதி தினமின பத்திரிகையில் வெளியிடப்பட்ட "சலுசலவுடன் ஆடை உற்பத்திக்கான அழைப்பு" என்ற விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டவாறு, விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய திகதி செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி வரை அல்ல என்பதை அறியத்தருகிறோம். செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதியிலிருந்து, அடுத்துவரும் 21 நாட்களுக்குள் அதாவது, 2020ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி வரை விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும் என்பதை தாழ்மையுடன் அறியத்தருகிறோம். அத்தினம், பிற்பகல் 4.30ற்கு முன்னதாக விண்ணப்பங்கள் கிடைக்கக் கூடியவாறு கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**தலைவர்,**
**சலுசல,**
**இல: 93, ஜாவத்தை வீதி, கொழும்பு 05.**

**மேலதிக விபரங்களை 0112586732 என்ற இலக்கத்திற்கு தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

நிதி அமைச்சு

## தேசிய லொத்தர் சபை

ஒரு (01) வருட காலப்பகுதிக்கு தேசிய லொத்தர் சபைக்கு கணனிமயமாக்கப்பட்ட லொத்தர் சீட்டு டிக்கட்டுக்களை அச்சடித்தல், வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்கான பெறுகை **(கொவிசெத, சுப்பிரி வாசனா, வாசனா சம்பத, ஜாதிக்க சம்பத, மெகா பவர், தன நிதானய, செவன (சீட்டிழுக்கப்படும்), நீரோக மற்றும் தருதிரி சம்பத)** மேலேயுள்ள பெறுகை தொடர்பாக 2020.09.10 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட விலைமனு ஆவணங்களில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. குறிக்கப்பட்ட விலைமனுவிற்காக 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்திற்கமைவாக பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
2. 2020.09.10ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட புதினப்பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 2020.09.30 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள விலைமனு திறக்கும் திகதியானது 2020.10.07 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் பிற்போடப்பட்டுள்ளது. விலைமனு ஆவணங்கள் 2020.10.06 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் மாத்திரமே பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**தேசிய லொத்தர் சபை,**
**இல. 32, தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.**
**தொலைபேசி இல.: 0114607019.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

சுகாதார சேவைகள் பிராந்திய பணிமனை, மன்னார்

## மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்களின் பெறுகை

1. மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காக விலைமனுதாரர்களை, சுகாதார சேவைகள் பிராந்திய பணிமனை சார்பாக, பிராந்தியபெறுகைக் குழுத் தலைவர் தற்போது அழைக்கின்றார்.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை ஊடாக விலைமனுக் கோரல் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தம் கையளிக்கப்படத் தகுதி பெறுவதற்கு விலைமனு கோரும் தரவின் 2ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த தகைமை பெறும் தகவுத் திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வங்காட்டும் தகுதியுள்ள விலைமனுதாரர்க்கு மன்னார், சுகாதார சேவைகள் பிராந்திய பணிமனையிலிருந்து (0232223114) மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரும் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. இந்த திணைக்களத்தில் காணப்படும் "விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்", தமது கடிதத் தலைப்பிலான ஒரு வேண்டுதல் மற்றும் வியாபார பதிவின் அனுமதிக்கப்பட்ட பிரதி என்பவற்றைச் சமர்ப்பித்து, ஆவணமொன்றிற்காக ரூ. 1,500/- மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம், 2020.09.28 முதல் 2020.10.19 வரையான வேலை நாட்களில், 09.00 மணி முதல் 15.00 மணி வரை, விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். கொடுப்பனவு முறையானது ரொக்கப்பணமேயாகும்.
6. விலைமனுக்கள் (மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி) 2020.10.20 அன்று மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர், மன்னார், தல்வுபாடு வீதி, சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர், பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரிற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்குச் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுவின் இலக்கம் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்படல் வேண்டும். தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
   விலைமனுத்திறப்பில் கலந்துகொள்ள முன்வரும் விலைமனுதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டதன் பின்னர் அவை உடனடியாகத் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள், அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கமைவான விலைமனுப்பிணையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

| விலைமனு எண் | வேலைகளின் விபரம் | தொகை | மீளளிக்கப் படாத கட்டணம் | விலை மனுப் பிணை |
|---|---|---|---|---|
| மருத்துவ உபகரண நிதியம் - PSDG 2020 | | | | |
| RDHS/MN/PSDG/ME/2020/77 | Neonatal Ventilator | 1 | 1,500.00 | 40,000.00 |
| தளபாட நிதியம் - PSSP 2020 | | | | |
| RDHS/MN/PSSP/FUR/2020/78 | திரையுடனான பல்லூடக ப்றொஜெக்டர் மற்றும் Laser Pointer Presenter | 1 | 1,500.00 | 11,400.00 |
| | Auto tracking camera for video conferencing & ADSL connection | 1 | | |
| | 15 Unit CCTV & 20 Channel DVR Capability of with 30 days backup HDD | 1 | | |
| | கணனி தொகுதியை வழங்கல் | 2 | | |
| | எழுதும் மேசைகள் | 6 | | |
| | குஷன் பண்ணப்பட்ட கைப்பிடியற்ற கதிரைகள் | 6 | | |
| | Induction அடுப்புகள் | 4 | | |
| | மின்சார கேத்தல்கள் | 4 | | |
| | ஒற்றை கட்டில்கள் - தேக்கை | 4 | | |

**வைத்தியர் (திரு) டீ விநோதன்**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,**
**மன்னார்.**

இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை

# கேள்வி கோரல்

**கேள்வி இல:** SEA/PD/HR/19-2020

## பாவிக்கப்பட்ட 02 வாகனங்களை விற்பனை செய்வதற்கான கேள்வி கோரல்

இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையினால் பாவிக்கப்பட்ட 02 வாகனங்களுக்காக கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | வாகன பதிவு இலக்கம் | வகை/ மாதிரி | எரிபொருள் வகை | உற்பத்தி ஆண்டு | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 300 - 7345 | நிசான் சனி B14 | பெற்றல் | 1998 | 15,000.00 |
| 2 | WP PD - 4477 | வெக்ஸ் வெகன் T5 டிரான்ஸ் பொட்டர் | டீசல் | 2007 | 15,000.00 |

இவ்வாகனங்களை 2020 ஒக்டோபர் 19 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் - பி.ப. 3.00 வரை BMICH இல் அமைந்துள்ள நிறுவன வளவில் முன் அறிவித்தலுடன் (திரு. சரத் சஞ்ஜய 071-8726823) பரீட்சித்துப் பார்க்கலாம். கேள்வி ஆவணங்களை கட்டிட இல. 2 இல் அறை இல. 2G - 02 (பெறுகைப் பிரிவு) இடம் அல்லது www.energy.gov.lk என்ற நிறுவன இணைய தளத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

கேள்வி ஆவணங்களை நிறுவனத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து வாரத்தின் வேலை நாட்களில் 2020 ஒக்டோபர் 19ம் திகதி வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணிக்கிடையில் கேள்விதாரர்களுக்கு மீளளிக்கப்படாத கேள்வி கட்டணமான ரூபா 1,500/- தொகைக்கு பெற்றுக் கொள்ளலாம். அதற்கு மேலதிகமாக ஒவ்வொரு வாகனத்திற்கும் மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு, மீளளிக்கப்படும் கேள்வி வைப்புக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். அதற்காக நிறுவனத்தின் காசாளரிடம் 2020 ஒக்டோபர் 19 பி.ப. 3.00 வரை கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம். அவ்வாறே குறித்தவாறு கொடுப்பனவுகளை "மீளளிக்கப்படும்" வைப்பு மற்றும் "மீளளிக்கப்படாத" கட்டணத்திற்காக காசு பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை கேள்வி விலைமனுவுடன் சமர்ப்பித்தல் கட்டாயமானது சகல கேள்விக்கும் கேள்விப் பிணையொன்றை கேள்வி ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளவாறு சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை பொறியிட்டு, இடது பக்க மேல் மூலையில் "பாவிக்கப்பட்ட வாகனங்களின் விற்பனைக்கு கேள்வி கோரல்" என்று குறிப்பிட்டு 2020 ஒக்டோபர் 20 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு கொழும்பு-07. பௌத்தாலோக்க மாவத்தை, BMICH வளாகத்தில் கட்டிடங்கள் இல் 2இல் அறை இல. - 2G - 02 இல் அமைந்துள்ள இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையின் பெறுகைப் பிரிவிற்கு ஒப்படைத்து அல்லது பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பலாம். பொறியிடப்பட்ட கேள்விகளை 2020 ஒக்டோபர் 20 மு.ப. 10.00 இற்கு இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபை மண்டபத்தில் திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகளுக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

மேலதிக தகவல்களை கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பெறுகை இலக்கம்: **011-2677445/ 0112-697375** நீடிப்பு 430

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை,**
**5ஆம் கட்டிடம் முதலாம் மாடி, பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபம்,**
**பௌத்தாலோக்க மாவத்த, கொழும்பு-07.**




இந்த சேவை தற்போது நாடு பூராகவும் செயற்படுத்தப்படுகிறது.
லேக்ஹவுஸ் சமூக சேவை

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT, WE HAVE IT

Sunday Observer adz Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want



- Auto Focus

Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369 011 2 429 368
E-mail adzsuo@gmail.com

## வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

# வழங்கல் அறிவித்தல்

முத்திரையிடப்பட்ட மனுக்களை **20 ஒக்டோபர் 2020** ஆம் திகதி **பி.ப 02.00** மணிக்கு முன் தலைவர், வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல. 15 ரொக்ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15 எனும் முகவரிக்கு கிடைக்கப்பெறுமாறு அனுப்பி வைக்கவும். CIDAவில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் தேவை.

| இலக்கம் | மனு இலக்கம் | வேலைத்திட்டம் தொடர்பான தகவல்கள் | மனுப்பிணையின் பெறுமதி (ரூபா.) | CIDA தரம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா.) | மனுக்கோரல் முடிவுத்திகதி |
|---|---|---|---|---|---|---|
| 01 | CFHC/SD/T/REP/DAM-QUAY/TAN/2020/26 | தங்காளை மீன்பிடித்துறைமுகத்தின் சேதமடைந்த கப்பல் துறை சுவரின் பழுதுகார்க்கும் பணி | 52,000.00 | C7 மற்றும் அதற்கு மேல் | 1,000.00 | 20.10.2020 ஆம் திகதி பி.ப 2.00 |
| 02 | CFHC/SD/T/REP/DAM-QUAY/NEG/2020/27 | நீர்கொழும்பு மீன்பிடித்துறைமுகத்தின் சேதமடைந்த - 30.0 மீற்றர் கப்பல் துறை சுவரின் பழுதுகார்க்கும் பணி | 39,500.00 | C8 மற்றும் அதற்கு மேல் | 1,000.00 | 20.10.2020 ஆம் திகதி பி.ப 2.00 |

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **25 செப்டெம்பர் 2020** ஆம் திகதி தொடக்கம் **19 ஒக்டோபர் 2020** ஆம் திகதி வரை **மு.ப 09.00** மணி தொடக்கம் **பி.ப 03.00** மணி வரை மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத மனுக்கட்டணத்தை செலுத்துவதன் மூலம் எழுத்து மூல விண்ணப்பத்தை கொழும்பு 15, ரொக்ஹவுஸ் லேன், இல.15 இல் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் வழங்கல் முகாமையாளருக்கு கையளிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

மனு ஆவணத்தின் மூலம் கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் அடிப்படையில் ஒழுங்குப்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்ட மனுக்கள் **20 ஒக்டோபர் 2020** ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன் முகாமையாளர், இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல 15, ரொக் ஹவுஸ் லேன், கொழும்பு 15 எனும் விலாசத்திற்கு பதிவுத்தபால் ஒன்றின் மூலம் அனுப்புதல் அல்லது வழங்கல் பிரிவில் மனுக்களை சேகரிப்பதற்காக இடப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். மனுக்களை முன்வைக்கவேண்டியது இரண்டு பிரதிகளுடன் **20 ஒக்டோபர் 2020** ஆம் திகதி **பி.ப 02.00** இன் பின்னர் கிடைக்கும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அதன் பின் மனுக்கள் உடனடியாக திறக்கப்படும். மனுதாரருக்கோ அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவருக்கு மனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் கலந்துகொள்ள முடியும்.

எந்தவொரு மனுவையும் முழுமையாக அல்லது பகுதியாக தெரிவு செய்யும் அல்லது நிராகரிக்கும் உரிமை வழங்கல் சபையையே சாரும்.

மேலதிக விபரங்களை சிவில் பொறியியலாளர் முகாமையாளர் - தொலைபேசி : 011-2527439, வழங்கல் முகாமையாளர். தொலைபேசி: 011-2525063 இன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,**
**இல - 15, ரொக்ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு- 15**

# பெறுகை அறிவித்தல்

## சுவாச நோய்கள் தொடர்பான தேசிய வைத்தியசாலை – வெலிசர

வெலிசர, சுவாச நோய்கள் தொடர்பான தேசிய வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக்குழுவினால் பின்வரும் வழங்கல்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | வழங்கல்கள் | மீளளிக்கப்படும் விலைமனுப் பிணையம் | தகைமைகள் | விலைமனு இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | மின் பிறப்பாக்கியிலிருந்து தீவிர சிகிச்சைப்பிரிவு, சத்திர சிகிச்சைக்கூடம் மற்றும் வாட்டுகளிற்கு மின்வழங்கும் வயர் கம்பிகளை புனரமைத்தல் | 17,200.00 | EM 5 | WL/12/2020 |
| 02 | சத்திரசிகிச்சை கூடம் தீவிரசிகிச்சைப் பிரிவு ஆய்வுகூடம் போன்ற பிரிவுகளின் மின் தொகுதிகளைப் புதுப்பித்தல் | 29,000.00 | EM 4 அல்லது அதற்கு மேல் | WL/07/2020 |

01. மீளளிக்கப்படாத கட்டணமான ரூபா.2500.00 இற்கான தொகையை வார நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை வைத்தியசாலையின் சிறாப்பருக்கு செலுத்தி 2020.09.28 முதல் 2020.10.12 வரை இதற்கான விலைமனுப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

02. பூரணப்படுத்தி முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரண்டு பிரதிகளாக, விலைமனு இலக்கம் மற்றும் மூலப்பிரதியெனக் குறிப்பிட்டு, 2020.10.13 அன்று மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு சுவாச நோய்கள் தொடர்பான தேசிய வைத்தியசாலைக்குப் பதிவுத்தபாலில் அல்லது, நேரடியாக பணிப்பாளர் பணிமனையில் ஒப்படைக்கலாம். 2020.10.13 அன்று மு.ப.10.00 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன், அச்சமயத்தில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன், விலைமனு தொடர்பாக இறுதித்தீர்மானமெடுக்கும் உரிமை, சுவாச நோய்கள் தொடர்பான தேசிய வைத்தியசாலையின் பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**சுவாச நோய்கள் தொடர்பான தேசிய வைத்தியசாலை - வெலிசர**
**தொலைபேசி இலக்கம் : 0112958271 (112)**
**தொலைநகல் இலக்கம் : 0112958272**

# கேள்வி அழைப்பு

## மாவட்டச் செயலகம் - பொலன்னறுவை

பொலன்னறுவை மாவட்ட செயலகத்தினால் செயற்படுத்தப்படும் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்படும் திட்டங்களுக்காக சீடா (CIDA) நிறுவனத்தின் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. பொலன்னறுவை மாவட்ட செயலகம், பெறுகைக் குழுவின் தலைவரால் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுவதுடன் குறித்த கேள்விப் பத்திரங்கள் 2020.09.28 முதல் 2020.10.12 வரை பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்காக குறித்த தரத்தில் செல்லுபடியாகும் பதிவைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் தகைமைபெறுவர். மீளளிக்கப்படும் பெறுகை வைப்பு மற்றும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணத்தை, பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் காசாளரிடம் காசாகச் செலுத்தி பற்றுச்சீட்டொன்றை அல்லது மீளளிக்கப்படும் பெறுகை வைப்பை அங்கீகரிக்கப்பட்ட வங்கிப் பிணையொன்றின் மூலம் சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2020.10.13 பி.ப. 2.30 முன் கிடைக்குமாறு மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம் பொலன்னறுவை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை சரியாகப் பூர்த்தி செய்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வேறுவேறு உறைகளில் இட்டு மீண்டும் அவ் உறைகள் இரண்டையும் ஓர் உறையில் இட்டு பொதியிடல் வேண்டும் அத்துடன் சகல உறைகளிலும் இடது மேற்பக்கம் குறித்த வேளையின் பெயரைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்து அதாவது 2020.10.13 பி.ப. 2.30 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.
5. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு வருகை தர அனுமதியுண்டு.
6. பூர்த்தியற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
7. நிர்மாணப் பற்றிய விபரங்கள் பொலன்னறுவை மாவட்ட செயலகத்திற்குள் மாவட்ட பொறியியலாளரிடம் (027-2222269) பெற்றுக்கொள்ளலாம்.
8. கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவிற்கு உரியது.
9. கடந்த 5 வருடத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் பற்றிய விபரங்கள் குறித்த கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
10. குறைந்த பட்ச அசையும் சொத்துக்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வங்கிக் கடன் வசதிகள் ரூபா 2.5 மில்லியனாக இருத்தல் வேண்டும்.
11. நடப்பு ஆண்டின் வெட் இற்காக பதிவு செய்தமைக்கான சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்.
12. முழுமையான கேள்வி அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் பெறுகைக் குழுவிற்கு உரியது.
13. கேள்வி பற்றிய மதிப்பீட்டு நடவடிக்கைகளின் போது மாகாணத்திற்குள் ஒப்பந்தக்காரர்களுக்காக 5% சலுகை கவனத்தில் கொள்ளப்படும்.

**அட்டவணை**

| இல. | நிர்மாண வேலையின் பெயர் | மதிப்பிடப்பட்ட தொகை (வெட் இன்றி) ரூ. | தேவைப் படும் சீடா பதிவு | கேள்விப் பத்திர கட்டணம் (மீளளிக்கப் படாத) ரூ. | கேள்விப் பத்திர கட்டணம் (மீளளிக்கப் படும்) ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | மெதிரிகிரிய பிரதேச செயலகத்தின் உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) புதிய உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணித்தல் | 7,851,596.08 | C7 & C6 (Building) | 3,000.00 | 95,000.00 |

**டபிள்யூ. ஏ. தர்மசிறி**
**தலைவர்,**
**பெறுகைக் குழு, மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்,**
**மாவட்ட செயலகம், பொலன்னறுவை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்

### வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

### Supply and delivery of Thunder Flashes & Serpent Flashes – 2021

01. மனித-யானை மோதல்கள் இடம்பெறும் பிரதேசங்களில் யானைகளை விரட்டுவதற்காக பாவிக்கப்படும் Thunder Flashes and or Serpent Flashes ஆகியவற்றை உற்பத்தி செய்யும் மற்றும் வழங்கும் தொழில்துறையில் ஆகக் குறைந்தது 02 வருட அனுபவமுள்ளவர்களிடமிருந்து வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார்.

02. 2021 ஆம் ஆண்டில் விலைமனு ஆவணத்தில் நிருணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப விபரக்குறிப்புக்களுக்கு ஒத்திசைவாக பின்வரும் எண்ணிக்கையான Thunder Flashes and or Serpent Flashes ஆகியவற்றை வழங்கல் மற்றும் ஒப்படைத்தலை வழங்குனர்/வழங்குனர்கள் மேற்கொள்ளல் வேண்டும்.

| Type of Flash | Bid Number | Quantity to be supplied within 2021 | Quantity to be supplied per month (Approx) | Bid Security (Rs) | Non-refundable Deposit (Rs) |
|---|---|---|---|---|---|
| Thunder Flashes (Big) | WL/02/21/THUNDER FLASHES (Big)/2021 | 235,000 | 19,580 | 451,200.00 | 8,000.00 |
| Thunder Flashes (Small) | WL/02/21/THUNDER FLASHES (Small)/2021 | 770,000 | 64,160 | 1,235,580.00 | 17,000.00 |
| Serpent Flashes | WL/02/21/SERPENT FLASHES/2021 | 291,250 | 24,270 | 677,000.00 | 11,000.00 |

03. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடாத்தப்படும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2020.10.16 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் மற்றும் வழங்க வேண்டிய Thunder Flashes and Serpent Flashes ஆகியவற்றின் மாதிரிகளையும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தில் பரீட்சிக்கலாமென்பதுடன் மேலதிக தகவலை 0112871537 என்ற தொலைபேசி எண்ணினூடாக நிதிக்கான உதவி பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

05. 2020.10.16 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள சிறாப்பரிடம் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், வானவேடிக்கைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான வியாபார பதிவுசெய்தல் சான்றிதழின் மூலப்பிரதி மற்றும் உரிமத்தின் மூலப்பிரதி மற்றும் அவைகளின் நிழற்படப்பிரதிகளுடன் (பரீட்சித்தலின் பின்னர் மூலப்பிரதி ஆவணங்கள் திருப்பி அனுப்பப்படும்) உரித்தான வியாபாரத்தின் அச்சிடப்பட்ட தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

06. மேலே குறிப்பிட்டுள்ள தொகையை விலைமனு ஆவணத்தில் அடக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வங்கி உத்தரவாதப் பாங்கில் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள சிறாப்பர் திணைக்களத்தில் மீளளிக்கப்படும் ரொக்கப்பணத்தில் வரவு வைக்கப்படல் வேண்டும்.

07. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு அதாவது 2021.01.19 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

